Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 15 | செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :177 வைகாசி 11ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 24 மே 2020 வள்ளுவர் ஆண்டு 2051

கொரோனாவிலிருந்து எம்மை நாமே பாதுகாப்போம்




நாம் பாவிக்கும் முகக்கவசங்கள் ரிசுக்கள் மற்றும் கையுறைகளை பாதுகாப்பாகக் கழிவகற்றுவது முக்கியமானதாகும்.

தகவல்: வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம்

## இராணுவத்தினரை தாக்கினராம் மூவர் கைது

யாழ்ப்பாணம், மே 24

இராணுவத்தினரைத் தாக்கிய தாகத் தெரிவித்து மூன்று பேர் கோப்பாய் பொலிஸ் நிலையத் தில் இராணுவத்தினரால் பிடித் துக் கொடுக்கப்பட்டுள்ளனர். உரும்பிராய் சந்திக்கு அண மையில் நின்றிருந்த இராணு வத்தினர் மீதே நேற்று மாலை தாக்குதல் நடத்தியதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது. 02

## பல்கலைக்கழக புகுமுக மாணவன் நீரில் மூழ்கி சாவு!

*முல்லைத்தீவில் துயரம்*



முல்லைத்தீவு, மே 24


முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரி வுக்கு உட்பட்ட மருதமடுக் குளத்தில் மூழ்கி இளை ஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்றுப் பிற்ப கல் 5.30 மணியளவில் இந்த சம்ப 02

## கோத்தாவுடன் மோடி நேற்று திடீர் பேச்சு

கொழும்பு, மே 24

ஜனாதிபதி கோத்தாபய ராஜப க்ஷவுடன், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்றுக் காலை தொலைபேசியூடாக பேச்சு நடத்தியுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட் டுள்ள அறிக்கையில், ஜனாதிபதி அலுவலகத்திலி ருந்து இந்தியப் பிரதமருடன் உரையாடிய ஜனா 02



## கொரோனா 1089

கொழும்பு, மே 24

கொரோனா தொற் றால் பாதிக்கப்பட்ட 21 பேர் நேற்று இனங்காணப்பட் டுள்ளனர். இவர்க ளுடன் சேர்த்து 1089 பேர் இலங் கையில் கொரோனா வால் பாதிக்கப்பட் டுள்ளனர். இவர்க ளில் 660 பேர் குண மடைந்துள்ளனர். 9 பேர் உயிரிழந்துள்ள னர். (ஒ,5)

### ஆணைக்குழுவுக்குள் பகிரங்க மோதல்

# ஹூலுக்கு எதிராக முறையிடவுள்ளேன்

## தேசப்பிரிய அதிரடி அறிவிப்பு



கொழும்பு, மே 24

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேரா சிரியர் ரட்ணஜீவன் ஹூலுக்கு எதிராக மஹிந்த அணியினர் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்ற நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழு தவிசாளர் மஹிந்த தேசப்பிரியவும் ஹூலுக்கு நெருக்குவாரங்களைக் கொடுக்கத் தொடங் கியுள்ளார். 02

## ஒருவருக்கும் தொற்றில்லை

யாழ்ப்பாணம், மே 24

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வு கூடத்தில் 53 பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட சோதனையில் எவருக்கும் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள தாக, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை யின் பணிப்பாளர் மருத்து வர் த.சத்திய 02

## தலைப்பிறை தென்பட்டது: இன்று நோன்பு பெருநாள்

கொழும்பு, மே 24

ஷவ்வால் மாத தலைப்பிறை தென்பட்டுள்ளதால் இலங்கை வாழ் முஸ்லிம்கள் நோன்பு பெருநாளை இன்று கொண் டாடவுள்ளதாக கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித் துள்ளது. (ஒ,5)




## நாடு முழுவதும் ஊரடங்கு தளர்வு

### சுருங்குகின்றது ஊரடங்கு நேரம்

கொழும்பு, மே 24

நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை முதல் நாட் டின் அனைத்து மாவட்டங்களிலும் ஊரடங்கு சட் டம் மறு அறிவித்தல் வரை தினமும் இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரை மட்டுமே நடைமு றைப்படுத்தப்படும். 02

# இலங்கையில் போர்க் குற்றவாளிகள் தண்டிக்கப்படாமை தவறான சமிக்ஞை

## போர்க்குற்ற விவகாரங்களுக்கான அமெ. முன்னாள் தூதுவர் ஸ்ரிபன் ராப் தெரிவிப்பு

கொழும்பு, மே 24

போர்க்குற்றங்களுக்குப் பொறுப்பா னவர்கள் உலகளவில் தண்டிக்கப் பட்டு வருகின்றனர். சர்வதேச சட்டங் களை மீறி குற்றங்களைப் புரிகின்றவர்கள் தண்டிக்கப்படுவர் என பண்பாட்டை வளர்க்க வேண் டிய தேவையுள்ளது. இதற்கு கட்டுப் படாமல் இலங்கை இருப்பதனை ஏற்கமுடியாது. இலங்கையில் போர் குற்றங்களுக்குப் பொறுப்பானவர் கள் கூண்டில் ஏற்றப்படாமை, தண் டிக்கப்படாமை ஓர் தவறான சமிக் ஞையாக இருக்கின்றது. இவ்வாறு போர்க்குற்ற விவகாரங்களுக்கான அமெரிக்காவின் முன்னாள் தூது வர் ஸ்ரிபன் ராப் தெரிவித்துள்ளார். இணையவழியூடாக தொடங்கி யுள்ள நாடு கடந்த தமிழீழ அரசின் அரசவை அமர்வின் தொடக்க நிகழ் வில், சிறப்பு அதிதியாக 02

## முல்லைத்தீவில் கடற்படையினர் 5 பேருக்கு கொரோனா தொற்று

முல்லைத்தீவு, மே 24

கேப்பாப்பிலவு விமானப் படை முகாமில் தனிமைப் படுத்தப்பட்டிருந்த வெலி சறைக் கடற்படை முகாம் கடற்படையைச் சேர்ந்த 10 பேருக்கு ஏற்கனவே கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மேலும் 5 பேருக்கு கொரோனா தொற்று இருப் 02

## கோத்தாவுடன்...

திபதி பரஸ்பர முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் பற்றி கருத்துக்களை பகிர்ந்துகொள்ள சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி தெரிவித்ததுடன், தற்போதைய கஷ்டமான காலகட்டத்தில் இலங்கைக்கு செய்த உதவிகள் தொடர்பில் பிரதமர் மோடிக்கும் இந்திய மக்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

இந்தியா அன்பளிப்பு செய்த 10 தொன் மருத்துவ உதவிகள் பெரிதும் பயனளித்ததாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். 'இந்தியா கொவிட் 19 நோய்த்தொற்றை சிறப்பாக கட்டுப்படுத்தியுள்ளது என்று நான் நம்புகின்றேன். அதற்காக நீங்கள் மேற்கொண்ட முயற்சிக்கு குறிப்பாக குறைந்த வசதிகளைக் கொண்டவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதார நிவாரணங்களை நான் பாராட்டுகிறேன். இலங்கையில் நாமும் நோய்த்தொற்றை திருப்திகரமாக கட்டுப்படுத்துவதில் வெற்றியடைந்திருக்கின்றோம்' என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். இதற்குப் பதிலளித்த இந்திய பிரதமர் 130 கோடி மக்களை கையாள்வது கடினமானது என்ற போதும் நோய்த்தொற்று பரவலை சுமார் 75வீதம் கட்டுப்படுத்த முடிந்திருப்பதாக தெரிவித்தார்.

'தெளிவான சிந்தனையுடன் விரைவாக கடினமான தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய ஒரு தலைவராகவே' ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவை தான் புரிந்து வைத்திருப்பதாக பிரதமர் மோடி அவர்கள் குறிப்பிட்டார். 'என்னிடமுள்ள தகவல்களின் படி இலங்கை நோய்த்தொற்றை சிறப்பாக கட்டுப்படுத்துவதில் வெற்றியடைந்துள்ளது. அதன் கௌரவம் உங்களையே சாரும்' என்றும் இந்திய பிரதமர் மேலும் தெரிவித்தார்.

தற்போது தனது முன்னுரிமை பொருளாதார புத்தெழுச்சியாகும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, சில முன்னணி திட்டங்களுக்கு மீண்டும் உயிரூட்டுவதற்கு இந்தியாவின் உதவியை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விரைவாக நிர்மாணிப்பது அவற்றில் ஒன்றாகும். பெறுமதி சேர்க்கப்பட்ட கைத்தொழில் மற்றும் விவசாய உற்பத்திகளை மேம்படுத்துவது மற்றுமொரு நோக்கமாகும். இத்துறைகளில் முதலீடு செய்யுமாறு இந்திய வர்த்தகர்களையும் தற்போது இலங்கையிலிருக்கும் இந்திய நிறுவனங்களையும் ஊக்குவிக்க முடியுமானால் அது கொரோனாவுக்கு பிந்திய காலப்பகுதியில் பொருளாதார புத்தெழுச்சிக்கு உதவியாக அமையும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்கும் இடையில் நடைமுறையில் உள்ள நிதி வசதிகளை பரிமாறிக்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கு ஜனாதிபதி முன்மொழிந்தார்.

சார்க் பரிமாற்ற வசதியின் கீழ் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ள 400 மில்லியன் டொலர்களுக்கு 1.1 பில்லியன் டொலர்களை சேர்ப்பதற்கு இந்திய அரசு இணங்கினால் அது அந்நிய செலாவணி பிரச்சினையை முகாமைத்துவம் செய்வதற்கு பெரும் உதவியாக அமையும் என்றும் ஜனாதிபதி அவர்கள் குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் மோடி, இலங்கைக்கு உதவுவதற்கு நான் தனிப்பட்ட முறையில் அர்ப்பணிப்புடன் உள்ளேன். இலங்கைக்கு சாதகமான நிபந்தனைகளின் கீழ் உதவுவதற்கு நாம் தயாராக உள்ளோம். இதற்காக கொழும்பில் உள்ள இந்திய தூதுவருடன் இணைந்து பணியாற்றுவதற்கு பொருத்தமான ஒரு பிரதிநிதியை நியமியுங்கள்' என்று தெரிவித்தார்.

தற்போது கட்டியெழுப்பப்பட்டுள்ள இருதரப்பு கூட்டுப்பங்காண்மையை மக்களுக்கு நேரடி நன்மைகளை கொண்டுவரும் மற்றும் உணவு, சுகாதார பாதுகாப்புக்கு முன்னுரிமையளித்த திட்டங்களாக முன்னெடுப்பதற்கு இரு தலைவர்களும் இணக்கம் தெரிவித்தனர். (ஒ.5)

## பல்கலைக்...

வம் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவனான பிரதீப்குமார் வளர்சிகன் (வயது-20) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த வருடம் க.பொ.த உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் தோற்றி மாவட்ட மட்டத்தில் மூன்றாம் நிலையைப் பெற்றிருந்தான். யாழ்ப்பாணத்தில் தங்கி நின்று கல்வி கற்றிருந்த நிலையில், மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்து அனுமதிக்கப்பட்ட பின்னர் முல்லைத்தீவுக்குச் சென்றிருந்தான்.

இந்த நிலையில் மருதமடுக் குளத்தில் குளிக்கச் சென்றபோது அதில் மூழ்கி உயிரிழந்துள்ளான்.

சடலம் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ.5,105)

## ஹூலுக்கு...

'ரட்னஜீவன் ஹூலின் செயற்பாடுகளில் நான் அதிருப்தி கொண்டிருக்கின்றேன். இது தொடர்பில் அரசமைப்பு பேரவையிடம் முறைப்பாடுகளை முன்வைக்க தீர்மானித்திருக்கின்றேன்' என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

'அண்மைக்காலமாக பேராசிரியர் ஹூலின் செயற்பாடுகள் ஆணைக்குழுவுக்கு பெரும் நெருக்கடிகளைத் தோற்றுவிப்பதன் காரணமாகவே இவ்வாறானதொரு முடிவை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம்' எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவில் மூன்று உறுப்பினர்கள் உள்ளனர். ஆணைக்குழுவின் தவிசாளராக நான் நியமிக்கப்பட்டுள்ள ஆரம்ப காலம் தொட்டே பேராசிரியர் ரட்னஜீவன் ஹூலின் செயற்பாடுகள் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதனவாகவே காணப்பட்டன. ஆனால், ஆணைக்குழு எடுக்கும் தீர்மானங்களுக்கு அவரது குறுக்கீடுகள் தடையாக அமையவில்லை. ஆணைக்குழு உறுப்பினர்களுக்குரிய கூட்டுப் பொறுப்பைக்கூட பல சந்தர்ப்பங்களில் அவர் மீறியுள்ளார். இதனை நான் பல தடவை அவரிடம் எடுத்துக் கூறி இருக்கின்றேன். ஆனால், பேராசிரியர் ஹூல் ஆணைக்குழு தீர்மானங்களுக்கு முரண்பட்ட வராகவே எப்போதும் காணப்படுகின்றார். அவர் ஒரு தலைப்பட்சமாக கருத்துக்களை ஆணைக்குழுவிலும் வெளியேயும் தெரிவித்து வருகின்றார். இதனால் தேர்தல்கள் ஆணைக்குழு பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதனால் நாட்டு மக்கள் தேர்தல்கள் ஆணைக்குழு மீதான நம்பிக்கையை இழக்கும் நிலை உருவாகி வருகின்றது.

சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு எடுக்கும் தீர்மானங்கள் முடிவுகள் ஏகமனதாக இருக்க வேண்டும். முடிவுகளில் எவரொரு உறுப்பினரும் முரண்பட முடியாது. இந்தநிலையில் பேராசிரியர் ஹூல் ஆணைக்குழு கூட்டங்களில் பங்கேற்று எடுக்கப்படும் முடிவுகள், ஆலோசனைகள் தொடர்பில் முரண்பாடான கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றார். ஆனால், இறுதியில் அதற்கு ஆதரவு அளித்துவிட்டு வெளியே விமர்சித்து வருகின்றார். இந்த விமர்சனங்களால் ஆணைக்குழு பெரும் சவாலுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

அவரது இவ்வாறான செயற்பாடுகள் தொடருமானால் அது பெரும் பிரச்சினைக்கு வழி வகுக்கலாம் என அச்சமடைகின்றோம்.

ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தேக்கம் அடையும் அச்சம் கூட எம்மிடம் காணப்படுகின்றது. இது தொடர்பில் அரசமைப்பு பேரவைக்குத் தெளிவுபடுத்தி கடிதம் எழுதத் தீர்மானித்துள்ளேன்.

ஆணைக்குழுவின் எந்தவொரு நபருக்கு எதிராகவும் அதன் தவிசாளர் என்ற ரீதியில் எந்த நடவடிக்கையையும் எடுக்கும் அதிகாரம் எனக்குக் கிடையாது. ஆணைக்குழுவை நியமித்த அரசமைப்பு பேரவைக்கு தெரிவிக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதற்கமையவே இந்தக் கடிதத்தை எழுதத் தீர்மானித்துள்ளேன். நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கூடும் ஆணைக்குழுவின் முக்கிய கூட்டத்தை அடுத்து இந்த முறைப்பாட்டை அரசமைப்பு பேரவைக்குத் தெரிவிக்கவுள்ளோம். அது தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவிக்க இருக்கின்றோம்.

இந்த முறைப்பாடு தொடர்பில் அரசமைப்பு பேரவை உரிய நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் நான் தொடர்ந்தும் ஆணைக்குழுவில் அங்கம் வகிப்பதா? இல்லையா? என்பது குறித்து தீர்மானிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படலாம்- என்றார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய, வெளிநாட்டில் கல்வி கற்ற தனது மகனை இலங்கைக்கு அழைத்து வந்திருந்தார். இதற்கு அவர் தனது அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியதாக குற்றச்சாட்டு எழுந்தது. ஆனால் தேசப்பிரிய அதனை மறுத்திருந்தார். அதனை நிரூபித்தால் பதவி விலகுவேன் என்றும் குறிப்பிட்டிருந்தார். இந்த நிலையில் சில தினங்களுக்கு முன்னர் ஊடகம் ஒன்றுக்கு பேராசிரியர் ஹூல் வழங்கிய நேர்காணலில், தேசப்பிரிய தனது மகனைக் கொண்டு கடிதம் எழுதி அதனை இலங்கை அதிகார தரப்பினரிடம் ஒப்படைந்திருந்தார் என்று குறிப்பிட்டிருந்தார். இவ்வாறானதொரு பின்னணியிலேயே தேசப்பிரிய, ஹூலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போவதாக பகிரங்கமாக ஊடக நேர்காணல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். (ஒ.5,22)

## முல்லைத்தீவில்...

பது நேற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எஸ். சுகந்தன் தெரிவித்தார்.

கடற்படையைச் சேர்ந்த 399 பேர் முல்லைத்தீவில் தனிமைப்படுத்தலுக்காக அழைத்து வரப்பட்டிருந்தனர். அவர்களில் 250 பேர் கேப்பாப்பிலவு விமானப் படையின் தனிமைப்படுத்தல் முகாமிலும், 149 பேர் இராணுவத்தினரின் தனிமைப்படுத்தல் நிலையங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 99 பேருக்கான பரிசோதனைகள் கடந்த 19ஆம் திகதி இடம்பெற்ற நிலையில் அவர்களில் 10பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. வெலிகந்த மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் 40 பேருக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் அவர்களில் 5 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களும் வெலிகந்த மருத்துவமனைக்கு நேற்று மாலை மாற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்றைய தினம் 35 பேரிடமிருந்து மாதிரிகள் பெறப்பட்டுள்ளன, என்றார். (ஒ.5)

## நாடு...

அன்று முதல் கொழும்பு மற்றும் கம்பஹா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கிடையே போக்குவரத்துக்கு அனுமதியளிக்கப்படும்.

இதுவரை இரவு 8 மணி முதல் அதிகாலை 5 மணி வரை ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும், இன்றும் நாளையும் ஊரடங்கு நடைமுறையிலுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## இலங்கையில்...

கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானத்தில் இருந்து இலங்கை வெளியேறியிருந்தாலும், இப்போதும் இலங்கையை கட்டுப்படுத்தும் ஓர் தீர்மானமாகவே அது உள்ளதோடு, இலங்கை அதற்கு கட்டுப்பட வேண்டிய நிலையில் உள்ளது. இலங்கை உலகத்தில் இருந்து தனிமைப்படுத்தப்படும் நிலையில் உள்ளது.

கடந்த காலங்களில் போர்க்குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள் உலகளவில் தண்டிக்கப்பட்டு வருகின்றனர். சர்வதேச சட்டங்களை மீறி குற்றங்களைப் புரிகின்ற வர்கள் தண்டிக்கப்படுவர் என்ற பண்பாட்டை வளர்க்க வேண்டிய தேவையுள்ளது. இதற்கு கட்டுப்படாமல் இலங்கை இருப்பதை நம்மால் ஏற்கமுடியாது. போர்க்குற்றங்களுக்கு பொறுப்பானவர்கள் கூண்டில் ஏற்றப்படாமை, தண்டிக்கப்படாமை ஓர் தவறான சமிக்ஞையாக இலங்கைக்கு இருக்கின்றது, என்றார். (ஒ.5)

## ஒருவருக்கும்...

மூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாண போதனா மருத்துவமனை விடுதிகளில் சேர்க்கப்பட்டிருந்த 5 பேர், யாழ்ப்பாண போதனா மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் பரிசோதிக்கப்பட்ட 4 பேர், முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த ஒருவர். புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட 8பேர், பெரியகாடு தனிமைப்படுத்தல் மையத்திலிருந்து 5 பேர், பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட 7பேர், பலாலி தனிமைப்படுத்தல் மையத்திலிருந்த 15 பேர், இரணைமடு தனிமைப்படுத்தல் மையத்திலிருந்து 8 பேர் என்று 53 பேரின் மாதிரிகள் நேற்றுப் பெறப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அவர்களுக்கு கொரோனா தொற்று இல்லை என்று பரிசோதனை முடிவு கிடைக்கப் பெற்றுள்ளது. (ஒ.5)

## ராணுவத்தினரை...

கோப்பாய், அனலைதீவு, சங்கானைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் முச்சக்கர வண்டியில் வந்து தாக்குதல் நடத்தியதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (ஒ.5,106)

# குழந்தைகளிடத்தே புதிய வகை நோய்

கொழும்பு, மே 24
குழந்தைகள் மத்தியில் புதிய வகை நோய் ஏற்படும் ஆபத்து இருப்பதாக மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். கொரோனா வைரஸ் பரவலின் மத்தியில் இந்த கவாசாகி என்ற நோய் குழந்தைகள் மத்தியில் ஏற்படுதால் பெற்றோர்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

விசேட மருத்துவ நிபுணர் தீபல் பெரேரா கூறுகையில், இந்த நோய் ஏற்கனவே இருந்தாலும் தற்போது கொரோனா தொற்றுக்கு மத்தியில் மேற்கத்தேய நாடுகளில் வேகமாக ஏற்படுகின்றது. இந்த நிலையில் தற்போது இலங்கையில் நோய்க்கான அறிகுறிகள் தென்பட்டதால் இங்கும் நோயாளர்கள் இனம்காணப்பட்டுள்ளனர்.

இந்த நோய் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவாத போதிலும் அவதானமாக இருக்க வேண்டும். மனித உடலில் குருதியைக்கொண்டு செல்லும் நாடியில் காணப்படும் அழற்சியினால் இந்த நோய் ஏற்படுகின்றது. இந்த நோய் நடுத்தர அளவுள்ள நாடிகளை தாக்குகின்றது. அதனால் இதயத்துக்கு குருதியைக் கொண்டு செல்லும் நாடிகளில் வீக்கம் ஏற்படும் போது இதயத்திற்கு பாதிப்பு ஏற்படலாம். இதுவொரு தன்னுடல் தாக்கும் நோய் என்பதோடு குழந்தைகளின் இதயத்தை பாதிக்கும் ஆபத்து உள்ளது.

பொதுவாக இந்த நோயின் அறிகுறிகளாக காய்ச்சல் ஏற்படுகின்றதாகவும் பின்னர் நாக்கு சிவந்து, ஸ்ட்ராபெரி போன்று தோற்றமளித்தல், தோலில் ஏற்படும் சிவப்பு நிறமான பருக்கள், தோல் உரிதல், உதடு மற்றும் கண் ஆகியன சிவப்பு நிறமாகி வீக்கமடைதல், அத்துடன் கழுத்தில் ஒரு வகை சொறி போன்று உருவாகும். இவை கவாசாகி நோய் அறிகுறியாக இருக்கலாம்.

இந்த நோய் 5 முதல் 12 வயது வரையான பிள்ளைகளையே பெரும்பாலும் பாதிக்கின்றது. இவ்வாறான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக சிறுவர் மருத்துவ நிபுணரிடம் ஆலோசனை பெறுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஓ,5)

# ஆலயத்தில் திரண்டோர் எச்சரிக்கையுடன் விடுவிப்பு



பருத்தித்துறை, மே 24
சமூக இடைவெளி பேணாது ஆலயப் பூசையில் கலந்து கொண்டவர்கள், ஆலயப் பூசகர் ஆகியோர் பருத்தித்துறைப் பொலிஸார் மற்றும் சுகாதாரப் பிரிவினரால் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் பருத்தித்துறை வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

மக்கள் சமூக இடைவெளியைப் பேணாது பூசையில் கலந்து கொண்டுள்ளதாக பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைப் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து அவர்கள் அங்கு சோதனைக்குச் சென்றனர். அதேநேரம் 119 இலக்கமூடாக பருத்தித்துறை பொலிஸாருக்கும் இம்முறைப்பாடு கிடைத்தது. அவர்களும் சம்பவ இடத்துக்கு வந்தனர்.

நிலைமையை நேரில் அவதானித்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் பொலிஸார், ஆலயப் பூசகரை அழைத்து எச்சரித்ததோடு வாக்குமூலத்தையும் பதிவு செய்தனர். இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவுறுத்திச் சென்றனர். (ஓ,5,9)

# காலிச் சிங்களவர் மன்னாருக்கு மாவட்டச் செயலரானது ஏன்?

## முருங்கன் விகாராதிபதி கேள்வி

மன்னார், மே 24
மன்னார் மாவட்டத்தில் பிறந்து இந்த மண்ணிலேயே கல்வி கற்று வளர்ந்த தமிழர்களே மன்னார் மாவட்டத்தில் மாவட்டச் செயலர் உட்பட அனைத்து பதவிகளுக்கும் நியமிக்கப்பட வேண்டும் என்று மன்னார், முருங்கன் ரஜமஹா விகாரை விகாராதிபதி வல்பொல சரண தேரர் தெரிவித்தார்.

மன்னார் உயிலங்குளம் பிரதான வீதியில் ஈ.பி.டி.பி அலுவலகம் நேற்று காலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. இதன் போது அமைச்சருடன் உரையாடுகையிலேயே மன்னார், முருங்கன் ரஜமஹா விகாரை விகாராதிபதி வல்பொல சரணதேரர் அவ்வாறு தெரிவித்தார்.

'நீங்கள் வடிவாக யோசிக்க வேண்டும். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் சேர்ந்து கடமையாற்ற வேண்டும். நான் உங்களுடன் முன்னுக்கு நிற்கின்றேன். எல்லோரும் வேலை செய்ய வேண்டும். வேலை வாய்ப்பை பெற்றுக்கொடுக்க வேண்டும். குறிப்பாக புத்தளம் மற்றும் வேறு இடங்களில் இருந்து இங்கு வந்து வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்ளுகின்றனர். ஏன் காலி மாவட்டத்தில் உள்ள சிங்களவர் ஒருவர் மன்னார் மாவட்ட மாவட்டச்செயலராக நியமிக்கப்பட்டு இருந்தார். அவர் வேறு மாவட்டத்தில் இருந்து மன்னாருக்கு வந்த மாவட்டச்செயலர். மன்னார் மாவட்டத்தில் பிறந்து இந்த மண்ணிலேயே கல்வி கற்று வளர்ந்த தமிழர்களே மன்னார் மாவட்டத்தில் மாவட்டச் செயலர் உட்பட அனைத்து பதவிகளுக்கும் நியமிக்கப்பட வேண்டும், என்றார்.

மன்னார் மாவட்டத்துக்கு சிங்கள மாவட்டச்செயலர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ள நிலையிலேயே விகாராதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார். (ஓ,5)

# ரிஸ்வானின் குழந்தைகளை பார்த்துக் கொள்கின்றேன்

## தற்கொலைக்கு முயன்று காப்பாற்றப்பட்ட யுவதி தெரிவிப்பு

கொழும்பு, மே 24
தலவாக்கலையில் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்த இளம் பெண் மன்னிப்பு கோரியுள்ளார். மருத்துவமனையிலிருந்து வெளியேறியதும், உயிரிழந்தவரின் குழந்தைகளை கவனித்துக் கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தற்கொலை செய்து கொள்ள முயற்சித்த 22 வயது பெண் திருச் செல்வம் சிறியானி என்ற பெண்ணை காப்பாற்றுவதற்காக 32 வயதான இளைஞன் ரிஸ்வான் பரிதாபமாக உயிரிழந்தார்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அந்தப் பெண்ணை பார்ப்பதற்காக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலவாக்கலை மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். இதன் போது கருத்து வெளியிட்ட பெண் தனது தீர்மானத்துக்காக மன்னிப்பு கேட்டுள்ளார்.

'எனது தனிப்பட்ட காரணத்தால் நான் அவசர தீர்மானத்தை எடுத்து விட்டேன். இதனால் ஒரு உயிரை இழக்க நேரிட்டுள்ளது. அதற்காக என்னை மன்னித்து விடுங்கள். நான் மருத்துவமனையிலிருந்து வெளியேறியவுடன் உயிரிழந்தவரின் குடும்பத்தினரையும் குழந்தைகளையும் பார்த்துக் கொள்வேன். நீரில் வைத்து நான் அவரது கையால் பிடித்துக் கொள்ளப்பட்டேன். அதன் பின்னர் நாங்கள் இருவரும் நீருக்குள் சென்றுவிட்டோம். நான் மேலே வந்து விட்டேன். என்னை காப்பாற்ற வந்தவர் மேலே வரவில்லை. யாரோ டியுப் ஒன்றை பயன்படுத்தி என்னை காப்பாற்றியது எனக்கு நினைவில் உள்ளது. அது யார் என்று தற்போதே அறிந்துக் கொண்டேன். என்னை காப்பாற்ற வந்தவர் நீரில் மூழ்க, தலவாக்கலை பொலிஸ் அதிகாரி ஒருவர் என்னை கரைக்குக் கொண்டு வந்து உள்ளார். அனைவருக்கும் நன்றி' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ,5)

# மதுபான விற்பனை நிலையங்களுக்கு புதிய ஒழுங்குகள் அறிவிப்பு

ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படுவதால் போக்குவரத்து குற்றங்களைத் தடுக்கும் வகையில் நாடு முழுவதுமுள்ள அனைத்து மதுபான சாலைகளும் இன்று ஞாயிற்றுக்கிழமை மற்றும் நாளை திங்கட்கிழமை மூடப்படும் என்று மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் திணைக்களம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் உள்ளதால் நாட்டின் அனைத்து கலால் உரிமம் பெற்ற மதுபான விற்பனை நிலையங்களும் இன்று மற்றும் நாளை மூடப்படும். இந்த ஆணை நாட்டின் பிற பகுதிகளைப் போலவே கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்கும் பொருந்தும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நாட்டில் நிலவும் சூழ்நிலையைப் பொறுத்தவரை, இன்றுவரை திறக்க அனுமதிக்கப்பட்ட கலால் உரிமம் பெற்ற இடங்கள் மட்டுமே நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை திறக்க அனுமதிக்கப்படும்.

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும், மதுபான உரிமம், பீர் மற்றும் வையின் உரிமம் ஆகியவை சில்லறை விற்பனைக்கு மதுபான உரிமத்தைத் திறக்க அனுமதிக்கப்படும், என்றுள்ளது. (ஓ,5)

# விடுதியில் கொண்டாட்டம் பங்கேற்றோர் தனிமைப்படுத்தல்!

திருகோணமலை, மே 24
திருகோணமலை அலஸ்தோட்டம் பகுதியிலுள்ள பிரபல விடுதியொன்றில் பிறந்தநாள் கொண்டாடியவர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக, உப்புவெளி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தல் மற்றும் தொற்று நோய்களை கட்டுப்படுத்தல் சட்டத்தை மீறி பிரபல விடுதியில் பிறந்த நாள் கொண்டாடிய குற்றச்சாட்டின் பேரில் விடுதி உரிமையாளர் மற்றும் பிறந்தநாள் கொண்டாடியவர்களை நேற்று முன்தினம் தனிமைப்படுத்தி உள்ளதாகவும் அவ்வலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த 15ஆம் திகதி உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அலஸ்தோட்டம் பகுதியில் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகரின் அனுமதி பெறாமல், ஒன்றுகூடி பிறந்த நாளை கொண்டாடிய நபர்கள் குறித்த விவரங்களை திரட்டி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ,5)

# வடக்கில் 775 இடங்களில் காற்று இடரால் மின் தடை

## 2,000 அழைப்புகளுக்கு பதிலளிக்கப்பட்டன

**கொடிகாமம், மே 24**

**தற்போது வீசிவரும் அதிவேக காற்றால் வடக்கு மாகாணத்தில் சுமார் 775க்கும் மேற்பட்ட இடங்களில் மின்சாரம் தடைப்பட்டுள்ளன. அவை உடனுக்குடன் சீர்செய்யப்பட்டுவருகின்றன. இதுவரை 2ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொலைபேசி அழைப்புக்களுக்கு பதிலளிக்கப்பட்டுள்ளன என்று மின்சார சபையினர் தெரிவித்தனர்.**

எனவே உங்களுக்கு தெரிந்தவகையில் எங்காவது மின்வடங்கள் (கரண்ட் கம்பிகள்) அறுந்திருந்தால், அதற்கு அருகில் செல்லாது, மற்றவர்களையும் செல்லவிடாமல் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டு உடனடியாக இலங்கை மின்சார சபைக்கு அறிவிக்கவும் என்று அறிவுறுத்தப்படுகின்றனர்.

அதற்குரிய இலக்கங்களையும் சபை அறிவித்துள்ளது.

சாவகச்சேரி - 021 227 0040, சுன்னாகம் 021 224 0301,யாழ். நகர் - 021 222 2609, 021 222 2498,பருத்தித்துறை - 021 226 3257,வட்டுக்கோட்டை - 021 225 0855,வேலணை -021 221 1525, வவுனியா -024 222 2379,மன்னார் -023 222 2150,கிளிநொச்சி - 021 228 5124,மாங்குளம் - 021 206 0036, முல்லைத்தீவு -021 229 0020,மடு-023 205 1565.

இவை தவிர, துரித தொடர்பு சேவை இலக்கங்கள் 1987 / 021 202 4444 ஆகிய இலக்கங்களுடனும் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-159)

# வழுக்கையாறில் குடிகாரர் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 24

வழுக்கையாறு மயானப்பகுதிகளில் மாலைவேளைகளிலும் இரவுவேளைகளிலும் சாராயம் மற்றும் பியர் ரின்களுடன் இளைஞர்கள் ஒன்று கூடு கின்றமை பற்றி நவாலி மேற்கு மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நவாலி வட்டுக்கோட்டை பிரதான வீதியின் மையத்தில் வழுக்கையாறு மயானம் உள்ளது.

அண்மையில்தான் மயானப்பாதுகாப்புக்காக மின் இணைப்புக்கள் மூலம் மின் வழங்கப்படுகின்ற பிரதேசமாக மாற்றப்பட்டது.

கொவிட் 19 காரணமாக தற்போது ஒன்றுகூடுவது தவிர்க்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ள போதிலும் மயான கொட்டகை மற்றும் மண்டபம் என்பனவற்றில் மதுப் பிரியர்கள் குவிகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-50)

# என் கருத்து நேர்மையானது இரா.சம்பந்தன் ஏற்கவேண்டும்

## ஆனந்தசங்கரி கோருகின்றார்

யாழ்ப்பாணம், மே 24

"தமிழ் அரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் குலநாயகம் என்னையும் சுமந்திரனையும் ஒப்பிட்டு என்னை விட மோசமான கருத்தை சுமந்திரன் கூறியுள்ளார் என்று தெரிவித்துள்ளார். ஆனால் சுமந்திரன் கூறிய கருத்து வெளிப்படையானது, நேர்மையானது என்று சம்பந்தன் கூறியுள்ளார். அப்படியாயின், என்னுடைய கருத்தும் மிக வெளிப்படையானதும், மிக நேர்மையானதும் என்று சம்பந்தனே ஒத்துக்கொள்ள வேண்டும்."

இவ்வாறு குறிப்பிட்டுள்ளார், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி.

அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை ஏற்றுக்கொள்ளாதபடியால்தான் குலநாயகம் போன்றோர் விடுதலைப் புலிகளை திருப்திப்படுத்துவதற்காக நான் கூறாத பொய்யான தகவல்களை திரித்துக் கூறினார்கள். ஒரு ஜனநாயக நாட்டில் ஏக பிரதிநிதித்துவம் என்பது சர்வாதிகாரத்துக்கான சொற்களாகும்.

சுமந்திரன் கூறிய கருத்தை இரா.சம்பந்தன் ஏற்றுக் கொள்வார் என்று எனக்கு தெரியும். அதனால்தான் நான் சமீபத்தில் சுமந்திரன் கூறிய கருத்தை பாராட்டினேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ளவர்கள் விடுதலைப் புலிகள் இருக்கும்வரை சம்பந்தனுடைய கருத்துக்கு உடன்பாடானவர்களாக இருந்தும் தங்களுடைய கருத்துக்களை மூடி மறைத்துவிட்டு புலிகளை அழிப்பதற்காக கூடஇருந்தே குழிபறித்தார்கள். சுமந்திரன் கூறிய கருத்துக்களும், அதை நியாயப்படுத்தி இரா. சம்பந்தன் வெளியிட்ட அறிக்கைகளும், எவருடைய தனிப்பட்ட கருத்துக்களாக பார்க்க முடியாது. ஒட்டுமொத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்தாகவே அதைப் பார்க்க வேண்டும். ஏனெனில், இருவரும் கூட்டமைப்பில் முக்கிய பதவிகளை வகிக்கின்றார்கள்.

துணிவிருந்தால் ஜனநாயகவாதியான தந்தை செல்வாவின் பெயரை சொல்லிக் கொண்டு, வேடிக்கை பார்க்காமல் தமிழ் அரசுக் கட்சியின் நிர்வாக செயலாளர் குலநாயகம், இரா.சம்பந்தனையும், சுமந்திரனையும் கட்சியிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் தமிழ் அரசுக் கட்சி குலநாயகம் குறிப்பிடும், இன விடுதலை மற்றும் சுதந்திரத்தை நோக்காகக்கொண்டு செயற்படுகின்றது என்பதை தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்வார்கள். அதை செய்துவிட்டு அடுத்த அறிக்கைக்கு தயாராகுமாறு குல நாயகத்தை கேட்டுக்கொள்கின்றேன்.

(து)

# 35 இடங்களில் டெங்கு குடம்பி

## கிளிநொச்சியில் கண்டறிவு

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதிகளில் 75 இடங்களில் நடத்திய டெங்கு நுளம்பு தடுப்பு சோதனை நடவடிக்கையில் 35 இடங்களில் டெங்கு நுளம்பு குடம்பிகள் இனங்காணப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன என்று பிராந்திய சுகாதார திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.


கொவிட் 19 வைரஸ் தாக்கம் அடையாளம் காணப்பட்டுவரும் நிலையில் தற்போது டெங்கு நோய் தாக்கமும் இலங்கையின் பல மாவட்டங்களில் காணப்படுகின்றது. மாவட்ட ரீதியில் அபாய எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டுள்ளன.

நுளம்புக் குடம்பிகள் இரண்டு வகைகளில் காணப்படுகின்றன. ஒன்று பெருக்கம் அதிகம் கொண்ட 'கடம்' எனவும் இரண்டு பாதிப்பு இல்லாத 'குடம்பி' எனவும் கிளிநொச்சியில் அடையாளம் காணப்பட்ட குடம்பிகள் இரண்டாவது வகையானது என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-6)



# புதையல் தோண்டியபோது சிக்கியது குங்கும 'குடம்'





வவுனியா, மே 24

வவுனியா நவ்வி பகுதியில் காணி ஒன்றில் புதையல் இருப்பதாக கிடைக்கபெற்ற தகவலுக்கமைய நேற்று தேடுதல் நடத்தப்பட்டுள்ளது. எனினும், குங்குமம் வைக்கப்பட்ட சிறியகுடம் ஒன்றைத்தவிர வேறு எதுவும் கிடைக்கவில்லை. அதனால் தோண்டப்பட்ட குழி மூடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த காணியில் சிலமாதங்களுக்கு முன்னர் இனம் தெரியாத நபர்களால் குழி ஒன்று தோண்டப்பட்டுள்ளது. பின்னர் காணியின் உரிமையாளரின் உறவினருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திய நபர் ஒருவர் அந்தக் காணியில் மர்மப்பொருள் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அதன் நிமித்தம் காணி உரிமையாளர் இந்த விடயம் தொடர்பாக ஓமந்தை பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். விசாரணை நடத்திய பொலிஸார், நீதிமன்ற அனுமதியுடன் நேற்று காணியில் அடையாளப்படுத்தப்பட்ட பகுதியில் குழி தோண்டும் நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன்போது 18அடி ஆழம் வரை குறித்த பகுதி தோண்டப்பட்டிருந்தபோதும் குங்குமம் வைக்கப்பட்ட சிறிய குடம் ஒன்றைத் தவிர வேறுஎதுவும் கிடைக்கவில்லை. அதனால் தோண்டப்பட்ட குழி மூடப்பட்டிருந்தது.

அந்த இடத்தில் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டு நீதிவான், தடயவியல் பொலிஸார், விஷேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர், வவுனியா பிரதேச செயலர், புலனாய்வாளர்கள், தொல்பொருள் திணைக்களத்தினர், தீயணைப்பு பிரிவினர், மருத்துவர்கள்

கிராமஅலுவலர் ஆகியோர் முன்னிலையில் குழி தோண்டப்பட்டிருந்தது. (த-110)

# மன்னன்குறிச்சி கந்தனுக்கு கொடி

கொடிகாமம், மே 24

மிருசுவில் வடக்கு மன்னன் குறிச்சி நெல்லிக் கிணற்றடி கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை 3.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 15 நாள்கள் திருவிழா நடைபெறவுள்ளது. எதிர்வரும் 4ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 5ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

திருவிழாவில் கலந்துகொள்வோர் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்குமாறு ஆலயத்தின் பிரதமகுரு அறிவித்துள்ளார்.

(த-159)




## கிளிநொச்சி மருத்துவமனையில்

# என்புமுறிவு, கண் சத்திர சிகிச்சை விடுதி அமைக்க ரூ.5.2 கோடி நிதி

## எஸ்.கே.நாதன் மற்றொரு பெருங்கொடை அடிக்கல் நடுகை நேற்றுமுன்தினம்

**கிளிநொச்சி, மே 24**

**கொடையாளர் எஸ்.கதிர்காமநாதனின் (எஸ்.கே.நாதன்) 5.2 கோடி ரூபா நிதி உதவியில் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் புதிதாக என்புமுறிவு சத்திர சிகிச்சை விடுதி மற்றும் கண் சத்திர சிகிச்சை விடுதி என்பன அமைக்கப்படவுள்ளன. அதற்கு நேற்றுமுன்தினம் அடிக்கல் நடுகை நடைபெற்றது.**

கட்டடங்களை வடக்கு மாகாண சுகாதார சேவை ஊடாக கட்டி வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் எஸ் கே.நாதனும் வடக்கு மாகாண பிரதம செயலரும் ஏற்கனவே கைச்சாத்திட்டிருந்தனர்.

அதன்படி மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் க.ராகுலன் தலைமையில் நேற்றுமுன்தினம் அடிக்கல் நடுகை நடைபெற்றது.

நிகழ்வில் கொடையாளர் எஸ்.கே.நாதன், மாவட்டச்செயலர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாண போதனா மருத்துவமனைப் பணிப்பாளர், மருத்துவர்கள் மாவட்டச் செயலர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

எஸ்.கே. நாதன் வடக்கு பகுதியில் பல்வேறு நிதி உதவிகளை வழங்கி வருகின்றார். இது தவிர கிளிநொச்சி பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்கான சிறுவர் இல்லம் மற்றும் முதியோர் இல்லம் என்பனவற்றையும் கடந்த பத்து வருடங்களாக தன்னுடைய சொந்த செலவில் இயக்கி வருகின்றார். கடந்த வருடம் யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக்கு சி.ரி. இயந்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக அதன் ஒரு பகுதி நிதியாக 2 கோடி ரூபாவை வழங்கியிருந்தார். (து)

# இறக்குமதிப் பொருள்களுக்கு வரியை அதிகரித்தது அரசு

கொழும்பு, மே 24

இறக்குமதியாகும் பல்வேறு பொருள்களுக்கு விசேட இறக்குமதி வரியை அறவிடவும் ஒரு சில பொருள்களுக்கு அந்த வரியை அதிகரிக்கவும் நிதியமைச்சு முடிவு செய்துள்ளது.

நிதியமைச்சர் என்ற வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்கு, வெங்காயம், வெள்ளைப் பூடு, சீனி, பருப்பு, செத்தல் மிளகாய், ரின் மீன் உள்ளிட்ட சுமார் 40க்கும் அதிகமான உணவுப் பொருள்களுக்கு விசேட வர்த்தக வரி விதிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் சீனிக்கு அறவிடப்பட்ட 35 ரூபா வரி, தற்போது நடைமுறைப்படுத்தப்பட்ட வரி திருத்தங்களுக்கு அமைய 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய ஒரு கிலோகிராம் சீனிக்கான இறக்குமதி வரி 15 ரூபாவால் உயர்வடைந்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் ரின் மீனுக்கு அறவிடப்பட்ட விசேட வர்த்தக வரி 100 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோகிராம் டின் மீனுக்கான இறக்குமதி வரி 50 ரூபாவால் உயர்வடைந்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் உருளைக்கிழங்குக்கான வரி 25 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் ஒரு கிலோகிராம் உருளைக்கிழங்குக்கு 25 ரூபா வரி அறவிடப்பட்டதுடன், இன்று நடைமுறைப்படுத்தப்பட்ட வரி திருத்தத்துக்கு அமைய 50 ரூபாவாக அறவிடப்படவுள்ளது.

ஒரு கிலோகிராம் கடலைக்கான விசேட வர்த்தக வரி 5 ரூபாவில் இருந்து 10 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோகிராம் வெள்ளைப் பூண்டுக்காக இதுவரையில் அறவிடப்பட்ட வரி 40 இருந்து 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சிறிய வெங்காயத்துக்கான விசேட வர்த்தக வரி 50 ரூபாவாக உயர்வடைந்துள்ளது. இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் யோகட்டுக்கு 625 ரூபா இதுவரையில் விசேட வர்த்தக வரியாக அறவிடப்பட்ட நிலையில், இன்று முதல் 800 ரூபா அறவிடப்படவுள்ளது.

இதேவேளை, கொண்டைக் கடலை, தோடம்பழம், எலுமிச்சை, திராட்சை, அப்பிள், க்வீன்சஸ், பேரீச்சம்பழம், மரமுந்திரிகை, மிளகாய், மிளகாய்த் தூள், சீரகம், பெருஞ்சீரகம், சோளம், மாஜரின், டின் மீன் உள்ளிட்ட மீன் வகைகள், பீட்றூட், சீனி உள்ளிட்ட ஏனைய சீனி வகைகள், சோயா எண்ணெய், மரக்கறி எண்ணைய், தேங்காயெண்ணெய் உள்ளிட்ட எண்ணெய் வகைகளுக்கு விசேட வர்த்தக வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஒரே சூலில் மூன்று குழந்தைகளை பிரசவித்த தாய்

ஒரே சூலில் 3 குழந்தைகளை அம்பாறை கோமாரி பகுதியை சேர்ந்த பெண்மணி ஒருவர் பிரசவித்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அம்பாறை கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனையில் இடம்பெற்றது. பிரசவ வலி என 28 வயதுடைய பெண் ஒருவர் காலை கோமாரி பகுதியில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் திருக்கோவில், அக்கரைப்பற்று, மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக மாற்றப்பட்டார்.

இவ்வாறு அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் அங்கு சத்திர சிகிச்சை மூலம் ஒரு சூலில் 3 குழந்தைகளை அந்தப் பெண் பெற்றெடுத்துள்ளார். 3 ஆண் குழந்தைகளும் தாயும் நலமாக உள்ளனர் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் குழந்தைகள் ஆயிரத்து 800 கிராம், 2 ஆயிரத்து 190 கிராம், 2 ஆயிரத்து 240 கிராம் நிறைகளுடன் ஆரோக்கியமாக உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# 5,000 கொடுப்பனவை நிறுத்துவது சரியல்ல

*சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு*

கொழும்பு, மே 24

கொரோனா வைரஸ் முடக்கநிலை காரணமாக வாழ்வாதாரத்தை இழந்தவர்களிற்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதை நிறுத்தி, அரசாங்கம் கடுமையான குற்றத்தை புரிந்துள்ளது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை அரசியல்மயமாக்குவது தொடர்பாக அரசாங்கத்தின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக மக்கள் அணிதிரள்வார்கள்.

மக்கள் பட்டினியில் உள்ளனர். பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டுள்ள நிலையில் அந்தக் கொடுப்பனவை வழங்கும் நடவடிக்கையில் இருந்து அரசாங்க தரப்பு உறுப்பினர்களை நீக்க வேண்டும்.

அந்தக் கொடுப்பனவினை வழங்கும் நடவடிக்கைக்கு கிராம உத்தியோகத்தர்களை மாத்திரமே நியமிக்க வேண்டும்- என்றார். (எ)

# மன்னாரில் 1,850 ஏக்கரில் சிறுபோகம் செய்ய சிபாரிசு

*நீர்ப்பாசனப் பணிப்பாளர் தெரிவிப்பு*

மன்னாரில் ஆயிரத்து 850 ஏக்கருக்கு சிறுபோகம் செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்ட நீர்ப்பாசனப் பணிப்பாளர் நடராசா யோகராசா தெரிவித்தார்.

மன்னாரில் இந்த வருடத்துக்கான சிறுபோகப் பயிர்ச் செய்கைக்கு என கட்டுக்கரைக் குளத்திலிருந்து கடந்த வியாழக்கிழமை தண்ணீர் திறந்து விடப்படும் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் தண்ணீர் திறக்கப்படவில்லை. அதற்கான காரணத்தை வினவிய போதே மன்னார் நீர்ப்பாசனப் பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவித்ததாவது;

கடந்த மே 11ஆம் திகதி கட்டுக்கரைக்கான நீர் வரவை வைத்து கட்டுக்கரைக் குளத்தின் கீழ் ஆயிரத்து 250 ஏக்கர் சிறுபோகப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளுவது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. தற்போது கட்டுக்கரைக் குளத்துக்கு நீர் வரவு திருப்தியாக உள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை நிலவரத்தின்படி கட்டுக்கரையில் 9 அடி 6 அங்குளம் நீர் உள்ளபடியால் கட்டுக்கரைக் குளத்தின் கீழ் ஆயிரத்து 850 ஏக்கரில் சிறுபோகம் செய்ய முடியும் என்ற பரிந்துரை மன்னார் மாவட்டச் செயலருக்கு கடந்த 18ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளது.

தண்ணீர் இன்னும் திறக்கப்படாதற்கான காரணம் விவசாயிகளுக்கான காணிகள் இன்னும் பிரிக்கப்படாமல் உள்ளது. முன்பு அனுமதிக்கப்பட்ட அளவு காணிகளையும் சிபாரிசு செய்துள்ள அளவுக் காணிகளையும் ஒன்றாகச் சேர்த்து பிரித்துக் கொடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். ஏனெனில் இரு பிரிவாகச் செய்யும் பொழுது வேலி அடைப்பு மற்றும் பல பிரச்சினைகள் உருவாகும் என்கிறார்கள். என்றாலும் மாவட்டச் செயலரின் பதிலின் பின்னரே அனைத்தும் தீர்மானிக்கப்படும் - என்றார். (ஐ-213)

# ஜனாதிபதியின் உரை கேட்டு மகாசங்கம் புளகாங்கிதமாம்

**கொழும்பு, மே 24**

**படைவீரர்கள் நினைவு தின விழாவில் ஜனாதிபதி ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்க அகராதியில் வார்த்தைகள் இல்லை எனக் குறிப்பிட்டுள்ள மகா சங்கத்தினர், அதற்காக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவை ஆசீர்வதித்தும் உள்ளனர்.**

ஒவ்வொரு மாதமும் மூன்றாவது வெள்ளிக்கிழமை ஒன்றுகூடும் பௌத்த ஆலோசனைச் சபை இரண்டாவது தடவையாக நேற்றுமுன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஒன்றுகூடியது. அங்கு கருத்துத் தெரிவித்தபோதே மகாசங்கத்தினர் மேற்கண்டவாறு தெரிவித்தனர் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் உள்ளதாவது கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை முறையாக மதிப்பீடு செய்து பாதுகாப்பதற்கு பாதுகாப்பு செயலாளரின் தலைமையில் ஜனாதிபதி செயலணியொன்று அமைக்கப்படும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அழிவடைவது குறித்து பல்வேறு தரப்பினர் விடயங்களை முன்வைத்து வருகின்றனர். இவை அனைத்தையும் கருத்திற்கொண்டு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை மையப்படுத்தி அவற்றைப் பாதுகாக்கும் பரந்த நிகழ்ச்சித் திட்டமொன்று தொல்பொருள் திணைக்களத்தின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

பௌத்த சமயத்துக்கும், திரிபீடகத்துக்கும் முரணாகச் சில பிக்குகளின் செயற்பாடுகள் உள்ளதால் பௌத்த சாசன உரையாடலொன்றின் தேவை தொடர்பாக மகாசங்கத்தினர் விரிவாக ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தினர். அது பற்றி மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தால் தனது பதவிக் காலத்தில் அதற்குத் தேவையான தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

உலகின் அனைத்து நாடுகளும் கொவிட்19 நோய்த் தொற்றால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நாட்டின் அனைத்து மக்களையும் பாதுகாத்து ஜனாதிபதி மேற்கொண்டு வரும் பணியை மகா சங்கத்தினர் பாராட்டினர்.

நாடெங்கிலும் பரவியுள்ள போதைப்பொருள் பிரச்சினையை ஒழிப்பதற்கு விரிவான நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை மகாசங்கத்தினர் வலியுறுத்தினர். இந்த விடயத்தில் அரசாங்கத்துக்கும், மகாசங்கத்துக்கும் பெரும் பொறுப்பு உள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

தேசிய பாதுகாப்பு பற்றிய தனது பொறுப்பை முழுமையாக நிறைவேற்றுவதாகவும், அதற்காக திறமையும் இயலுமையும் கொண்ட அதிகாரிகளை நியமித்துள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். படைவீரர்கள் நினைவு தின விழாவில் ஜனாதிபதி ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்க அகராதியில் வார்த்தைகள் இல்லை எனக் குறிப்பிட்ட மகாசங்கத்தினர், அதையிட்டு ஜனாதிபதியை ஆசிர்வதித்தனர்.- என்றுள்ளது. (எ)

# வெலிசறை முகாம் இருவாரங்கள் பூட்டு

கொழும்பு, மே 24

கம்பஹா, வெலிசறை கடற்படை முகாம் இன்னும் இரண்டு வாரங்களுக்கு மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முகாமிலிருந்த பலருக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டதை அடுத்து சிப்பாய்கள் தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இந்தநிலையில் சுகாதாரத் துறையினரின் பரிந்துரைகளின் அடிப்படையில் அந்த முகாம் மூடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)



# வவுனியா ஆலயங்களில் கலந்துரையாடல்

கொவிட் 19 நோயிலிருந்து மக்களைப் பாதுகாப்பது தொடர்பாகவும் மற்றும் ஆலய வழிபாட்டை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பானதுமான கலந்துரையாடல் வவுனியா வைரவபுளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்திலும், நெலுக்குளம் பொதுநோக்கு மண்டபத்திலும், ஆச்சிபுரம் கிராம அபிவிருத்தி அலுவலகத்திலும் நடைபெற்றுள்ளது.

வவுனியா மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியம், வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம், மற்றும் ஆலய பரிபாலன சபைகளின் பங்குபற்றுதலுடன் சுகாதார சேவையின் திணைக்கள உத்தியோகத்தர்களால், இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கலந்துரையாடல் அனைவருக்கும் பயன்பாடுடையதாக அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ப-222)

# 7 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள்கள் சிக்கின

## இலங்கைக்கு கடத்தவிருந்தநிலையில் தமிழகப் பொலிஸார் வளைத்துப் பிடிப்பு

சென்னை, மே 24

பாக்கு நீரிணைக் கடல் வழியாக இந்தியாவில் இருந்து இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த பல கோடி ரூபா இந்திய மதிப்பிலான போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்றும், போதைப் பொருள் கடத்தல் தொடர்பில் ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழ்நாடு, ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை ஊடாக இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த போதைப் பொருள்களே கைப்பற்றப்பட்டுள்ளன. ராமநாதபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அந்தப் பகுதியின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் இரவு திருவாடானை அருகில் வாகனங்களைச் சோதனையிட்டபோது ஓட்டோ ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டது. போதைப்பொருள்களான மெத்தோக்குலான், ஆம்பிட்டமெயின், பெத்தாமெட்டயின் மற்றும் செம்மரக்கட்டைகள், கைபேசிகள், எடை பார்க்கும் இயந்திரம் உள்ளிட்ட பொருள்கள் மறைத்து வைத்திருந்த நிலையில் அவையும், ஓட்டோவும் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பில் இந்தியாவின் வட மாநிலத்தைச் சேர்ந்த 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் ராமநாதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்களின் சர்வதேச மதிப்பு சுமார் 5 முதல் 7 கோடி இந்தியா ரூபா என்று ராமநாதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(எ)

# வீட்டுத்தோட்ட விதைகள் அடுத்தவாரம்


வேலணை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மக்களுக்கு வீட்டுத்தோட்டம் செய்வதற்கான மரக்கறி விதைகள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் நிதிப்பங்களிப்பில் மரக்கறி விதைகள் அடுத்த வாரமளவில் வழங்கப்படவுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையால் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் மக்கள் கடந்த 2 மாதங்களாக வீட்டுக்குள் முடங்கி இருந்தனர். இந்த நிலையில் வீட்டுத்தோட்டம் செய்து நஞ்சற்ற விவசாய உற்பத்தியை மக்கள் மேற்கொள்ள வேண்டும் என்று அரசு தெரிவித்தது. அதற்கு அமைவாக விதைகளும் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. வேலணை பிரதேச சபையும் மக்களுக்கு மரக்கறி விதைகளை வழங்கி வீட்டுத்தோட்டத்தை ஊக்குவிக்க முன்வந்துள்ளது. (ஐ-7)

# மரண அறிவித்தல்

## இராசா பவளம்



இல.33 ஆடியபாத வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசா பவளம் நேற்று சனிக்கிழமை (23.05.2020) இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு இராசா அவர்களின் அன்பு மனைவியும், கனகசிங்கம் (லண்டன்), இரத்தினசிங்கம் (ஓய்வுநிலை செயலாளர்- யாழ்.மாநகர சபை- நிர்வாக செயலாளர்), இராசதுரை (லண்டன்), இராமச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுவர்னேஸ்வரி, சந்திரா, கீதா ஜெயராணி, பங்கையச் செல்வி ஆகியோரின் மாமியாரும் சதீசன் (டாக்டர்- லண்டன்), சாளினி (லண்டன்), சசீலா (லண்டன்), அகிலன் (மருத்துவ தொழில்நுட்பவியலாளர் - ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை), மதன் (உதவிப் பணிப்பாளர் 3ஆம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு), ஆதவன், அருணன், பாமளா (லண்டன்), கௌரிகா (லண்டன்), ரூபிகா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் கீரா, லீயா, அஸ்வினி, அஞ்சலின், அமலி, ஜலா, ரூபன், அரன், தர்சனா, சங்கீர்த்தனா, அக்சனா, மதுஷிகா, அஸ்விகா அவர்களின் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (24.05.2020) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**59/2 சட்டநாதர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.**

தகவல்:
**இ.இரத்தினசிங்கம் (மகன்)**

# வந்து சேர்ந்தன தபால் பொதிகள்

யாழ்ப்பாணம், மே 24

வெளி மாவட்டங்களுக்கான தபால்கள் நேற்றுமுன் தினம் காலை யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளன. வவுனியா விரைவு கடுகதி தபால் வாகனம் மூலம் இந்த தபால்கள் யாழ்ப்பாணத் துக்கு எடுத்துவரப்பட்டன என்று தபாலகம் தெரிவித்தது. தபால்கள் தரம்பிரிக்கப்பட்டு உடனடியாக உரியவர்களுக்கு விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வெளிமாவட்டங்களுக்குரிய தபால்கள் தபாலக வாகனங்கள் மூலம் வவுனியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

தபால் சேவைகள் தற்போது வழமைபோன்று இடம்பெற்றுவருகின்றன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (கு-17)



# அத்துமீறிய விதைப்பு 7,500 ரூபா தண்டம்

கிளிநொச்சி, மே 24

கிளிநொச்சி அக்கராயன்குளத்தின் தண்ணீர் முகாமைத்துவத்தை குழப்பும் வகையில் அத்துமீறிய விதைப்பில் ஈடுபட்டிருந்த இருவரிடம் தண்டம் அறவிடப்பட்டுள்ளது. எனிமேல் அவ்வாறு செய்ய மாட்டோம் என்று அவர்கள்கூறிய பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். அவர்களுக்கு தண்ணீர் வழங்கப்படுகின்றது என்று நீர்ப்பாசன பொறியியலாளர் எஸ். செந்தில்குமரன் தெரிவித்தார்.

இரண்டு கமக்காரர்கள் எட்டு ஏக்கரில் அத்துமீறிய விதைப்பில் ஈடுபட்டனர். அவர்களைத் தண்டிக்கும் வகையில் குறித்த வாய்க்காலூடான தண்ணீர் விநியோகம் பூட்டப்பட்டது.

அதனால் சுமார் 330 ஏக்கர் வரையான வயல் நிலங்கள் பாதிப்படைந்தன என்று கமக்காரர்கள் கவலை தெரிவித்திருந்தனர்.

அத்துமீறிய விதைப்பை அனுமதிக்க முடியாது, அதனை நாமும் ஏற்றுக்கொள்ளவில்லை. சட்டத்தை மதிக்காது அத்துமீறிய விதைப்பில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்படவேண்டும். ஆனால் சட்டரீதியாக விதைப்பில் ஈடுபட்ட பெரும்பாலான விவசாயிகள் பாதிக்கப்பட இடமளிக்கக்கூடாது.

கடந்த பத்து நாள்களாக மழை காரணமாக தண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டிருந்தது. ஆனாலும் எமது வயலுக்கு போதுமான மழை கிடைக்கவில்லை. பின்னர் தண்ணீர் திறந்துவிடப்பட்ட போதும் அத்துமீறிய விதைப்பில் ஈடுபட்டவர்களால் தண்ணீர் இன்றி நாங்கள்தான் பாதிக்கப்பட்டோம். என்று சட்டரீதியான விதைப்பில் ஈடுபட்டிருந்தவர்கள் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பில் மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் எஸ். செந்தில்குமரனிடம் கேட்டபோதே தண்டம் அறவிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

அத்துமீறிய செய்கையாளர்களைத் தண்டிக்கவே தண்ணீர் செல்லும் வாய்க்காலை பூட்டியிருந்தோம். இனிவரும் காலங்களில் அத்துமீறிய விதைப்பு இடம்பெறாது என்று கமக்கார அமைப்பு உத்தரவாதம் வழங்கியிருந்தது.

அத்துமீறிய விதைப்பில் ஈடுபட்டவர்கள் தண்டம் அறவிடப்பட்டு அதன் சிட்டையை எம்மிடம் வழங்கினர். அதனையடுத்தே நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை தண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. என்று தெரிவித்தார். (கு-214)

நெருக்கடி ஏற்படுவதைத் தடுக்க

# கல்விப் பணிப்பாளர்களை விரைவில் நியமிக்கவும்

## மூத்த கல்வியியலாளர்கள் கோரிக்கை

**யாழ்ப்பாணம், மே 24**

**வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு உட்பட்ட கல்வி வலயங்களில் மூன்று வலயக் கல்விப் பணிப்பாளர்கள் விரைவில் ஓய்வுபெற்றுச் செல்லவுள்ளனர். இந்தநிலையில் மீண்டும் நெருக்கடி நிலைமை ஏற்படவுள்ளதை எதிர்பார்க்க முடிகின்றது. எனவே முற்கூட்டிய நேர்முகத் தேர்வுகளை நடத்தி உரிய காலத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.**

நாடு முழுவதும் கல்வி நிலைமை முடங்கியுள்ளது. வடக்கு மாகாண கல்வி நடவடிக்கைகளும் அதே நிலைமையில் உள்ளது. எதிர்வரும் காலங்களில் கல்வி நிலைமை சீரடையும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் மூன்று மூத்த வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஓய்வு பெற்றுச் செல்லவுள்ளனர்.

வடமராட்சி, வலிகாமம் மற்றும் யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர்களே ஓய்வு பெற்றுச் செல்லவுள்ளனர். இந்த வெற்றிடங்கள் யாழ்ப்பாண மாவட்டத்துக்குள் வருவதனால் தேர்வில் போட்டித் தன்மை காணப்படும். அதேநேரம் நிர்வாக ரீதியில் அதிக நெருக்கடிகளும் ஏற்படும்.

இலங்கையில் கல்வி நிலைமையில் இறுதி இடத்தில் வடக்கு மாகாணம் உள்ளதாகச் சுட்டிக்காட்டப்படும் நிலையில் அதிகாரிகள் ஓய்வு பெற்றுச் சென்றால் பல மாதங்களின் பின்னரே புதிய அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றார்கள். இந்தநிலைமையே வடக்கு மாகாணத்தில் காணப்படுகின்றது. எனவே அதனைப் போக்க தற்போதைய காலத்தில் இதற்கான தயார்ப்படுத்தலையும் மேற்கொள்ளவேண்டும் என்று மூத்தகல்வி அதிகாரிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (கு-105)

மருத்துவபீட இறுதியாண்டு மாணவருக்கு

# தனிமைப்படுத்தலின் பின் பரீட்சை நடத்த அனுமதி

யாழ்ப்பாணம், மே 24

யாழ்ப்பாணம் உட்பட பல்கலைக்கழகங்களின் மருத்துவபீட இறுதி ஆண்டு மாணவர்களின் பரீட்சையை சுகாதார விதிமுறைகளுடன் நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் 8 பல்கலைக்கழகங்களில் மருத்துவ பீட மாணவர்கள் கல்வி கற்கின்றனர். 4 பல்கலைக்கழகங்களில் இறுதி மாணவர்களின் பரீட்சை முடிவுற்றுள்ளபோதிலும் யாழ்ப்பாணம், உட்பட 4 பல்கலைக்கழகங்களில் பரீட்சைகள் நடைபெறவில்லை. இந்த 4 பல்கலைக்கழகங்களில் மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்களின் பரீட்சைகளை நடத்தி முடிப்ப தற்காகவே இது பற்றிய கோரிக்கை சுகாதார அமைச்சிடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதில் கொழும்பு, பெரதெனியா, ரஜரட்ட, ஜெயவர்த்தனபுர ஆகிய பல்கலைக்கழகங்களில் மருத்துவபீட இறுதியாண்டு பரீட்சைகளை நிறைவு செய்தபோதும் யாழ்ப்பாணம், களனி, கிழக்கு பல்கலைக்கழகங்களில் பரீட்சை நடைபெறவில்லை. இதன் அடிப்படையிலேயே குறித்த கோரிக்கை சிபார்சு செய்யப்பட்டது.

இதன் பிரகாரம் மருத்துவபீட இறுதி ஆண்டு மாணவர்கள் மட்டும் எதிர்வரும் 14ஆம் திகதி விடுதிகளுக்கு சமுகமளிக்க வேண்டும். அந்த மாணவர்கள் 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள். அதன் பின்னர் பரீட்சை இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. பரீட்சைகள் நடைபெறவிருந்த நிலையிலேயே கொரோனா காரணமாக ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதால் பரீட்சைகள் முடங்கின. (கு-105)

# திண்மக் கழிவகற்றல் தென்மராட்சியில் ஆரம்பம்

சாவகச்சேரி, மே 24

தென்மராட்சியில் டெங்கு ஒழிப்புக்கான கழிவகற்றல் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை விடுத்த வேண்டுகோளையடுத்து தென்மராட்சிப் பிரதேச செயலகம் மற்றும் சாவகச்சேரி நகரசபை ஆகியனவற்றின் பங்கேற்றலுடன் இது நடைபெறுகின்றது. சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உக்காத கழிவுப் பொருள்களை அகற்றும் பணிகள் நேற்று நடைபெற்றன.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கழிவுப் பொருள்கள் வைப்பதற்கென 11வட்டாரங்களிலும் ஒதுக்கப்பட்ட 24 இடங்களில் பொதுமக்கள் குவித்த உக்காத கழிவுப்பொருள்கள் நகரசபை சுகாதார பணியாளர்களால் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டன.

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் எதிர்வரும் 26 ஆம் திகதி நாவற்குழி பிரதேசத்திலும் 28 ஆம் திகதி கைதடி பிரதேசத்திலும் 29 ஆம் திகதி மட்டுவில் பிரதேசத்திலும் ஜூன் முதலாம் திகதி மந்துவில் பிரதேசத்திலும் இரண்டாம் திகதி வரணிப் பிரதேசத்திலும் நான்காம் திகதி கொடிகாமம் பிரதேசத்திலும், எட்டாம் திகதி எழுதுமட்டுவாள் பிரதேசத்திலும் உக்காத கழிவுப்பொருள்கள் வாகனங்களில் அப்புறப்படுத்தப்படும். பொதுமக்கள் தமது பிரதேசத்துக்கு ஒதுக்கப்பட்ட தினத்தில் உக்காத கழிவுப் பொருள்களை வாகனம் வரும் இடங்களில் வைக்குமாறும் அறிவித்துள்ளனர். (கு-9)

# செயலரின் இடமாற்றத்தை நிறுத்திய ஆணைக்குழு

வடக்கு மாகாண ஆளுநரால் இடமாற்றம் செய்யப்பட்ட வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளரை மீள பதவிக்கு நியமிக்குமாறு தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

வடக்கு மாகாண விவசாய கமநல சேவைகள், விலங்கு உற்பத்தி நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய கே.தெய்வேந்திரனை பணி இடமாற்றம் செய்தது சட்டவிரோதமானது என்று தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸின் பணிப்புரைக்கமைய ஆளுநரின் செயலாளரால் மேற்கொள்ளப்பட்ட குறித்த இடமாற்றம் சட்டவிரோதமானதுடன் மார்ச் 2 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின் அரச நிறுவனங்களின் நியமனங்கள் பதவி உயர்வுகள் இடமாற்றங்கள் உள்ளிட்ட நிர்வாக அலுவல்களை மேற்கொள்ள முடியாது. அந்தவகையில் குறித்த நியமனம் குறித்த திகதிக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் அவருடைய இடமாற்றத்தை ரத்துச் செய்து அவர் முன்னர் பணியாற்றிய இடத்துக்கு அவரை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. (கு-159)

# தேர்தல்கள் ஆணைக்குழுவை மிரட்டுகிறது மஹிந்த அணி

கொழும்பு,மே 24

**நாட்டுக்கு எதிரான சக்திகளின் தேவையை நிறைவேற்றும் வகையில் தனது அதிகாரத்தை தேர்தல் ஆணைக்குழு பயன் படுத்தக்கூடாது. என்றாவது ஒருநாள் பொறுப்புக் கூறவேண்டிய நிலை ஏற்படும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எச்சரிக்கை விடுத்துள்ளது.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு இது தொடர்பில் கருத்து வெளியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஷெயான் சேமசிங்க தெரிவித்ததாவது:
கடந்த 22 நாள்களில் சமூகத்தில் இருந்து கொவிட் 19 வைரஸ் பரவிய ஒரு நபரேனும் அடையாளம் காணப்படவில்லை. நிலைமை இப்படி இருக்கையில் தேர்தலை மேலும் 3 மாதங்கள் வரை ஒத்தி வைப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தால், அது எதிரணிகளின் அரசியல் நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றுவதாகவே அமையும்.
தேர்தலை நடத்த வேண்டாம் என ஐக்கிய தேசியக்கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாகக் கருத்துகளை வெளியிட்டுவருகின்றன. இதற்காக நீதிமன்றத்தையும் அந்தக் கட்சி உறுப்பினர்கள் நாடியுள்ளனர்.
குறிப்பாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தனது பொறுப்பை உரிய வகையில் நிறைவேற்றியுள்ளார். அதுபோல நாட்டுக்காக தனது கடமையை தேர்தல் ஆணைக்குழு நிறைவேற்ற வேண்டிய காலகட்டம் தற்போது வந்துவிட்டது.
எனவே, வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை நாட்டுக்கு எதிரான சக்திகளின் தேவையின் பிரகாரம் செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டாம். அத்தகைய சக்திகளுக்கு அடிபணியக்கூடாது எனத் தேர்தல் ஆணைக்குழுவிடம் கேட்டுக் கொள்கின்றோம். ஏனெனில் நாட்டில் தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு என்றாவதுஒருநாள்தேர்தல்ஆணைக்குழு பொறுப்புக் கூறவேண்டிவரும்.
தேர்தல் ஆணைக்குழு தன்னிச்சையாகச் செயற்படக்கூடாது. நாட்டுக்காக தனது கடமையை அவ்வாணைக்குழு நிறைவேற்றவில்லை என்பதே பொதுவான கருத்தாகும்.
அதேவேளை, தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூலை அரசசார்பற்ற அமைப்புகளே வழிநடத்துகின்றன. அவர் நாட்டுக்கு தீங்கு விளைக்கின்றார். எனவே, பேராசிரியர் ஹூலை முன்னிலைப்படுத்தி அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு மஹிந்த தேசப்பிரிய தலைமையிலான தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்காது என நம்புகின்றோம் - என்றார். (க-44)



# தீப்பற்றி எரிந்தது நான்கு ஏக்கர் காடு

மட்டக்களப்பு,மே 24
மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பாசிக்குடா பிரதேசத்தில் சுமார் நான்கு ஏக்கர் காடு தீப்பற்றி எரிந்துள்ளதாக கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.
பாசிக்குடா முருகன் ஆலய வீதியிலுள்ள அரச காணியொன்றின் காட்டுப் பகுதிலேயே நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
கல்குடா பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மட்டக்களப்பு மாநகர தீயணைப்பு படையினர், கல்குடா பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.
தீப் பரவலுக்கான காரணம் தெரியவில்லை எனவும், குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கல்குடா பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-150)

# நாகபூசணி அம்மன் கோவிலில் குழப்பம்

யாழ்ப்பாணம், மே 24
யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் சீரணி அம்மன் ஆலயத்தில் இதுவரை காலமும் பூசை செய்துவரும் குருக்களை மாற்றியதால் நேற்றுமுன்தினம் அங்கு குழப்பம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
போரின் பின்னர் அந்தக் கோவில் நிர்வாகம் இயங்கவில்லை. கோவிலுக்கு ஒரு சிலர் உரிமை கோரி வருகின்றனர். கோவில் தொடர்பான வழக்கு நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றது.
இந்தநிலையில் அங்கு பூசை செய்துவரும் குருக்கள்திடீரெனநிறுத்தப்பட்டு வேறு ஒருவர் பூசை வழிபாடுகளை மேற்கொள்ள முற்பட்டதால் அதற்குக் கிராம மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர் என்றும் அதனால் குழப்பம் ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.
சம்பவ இடத்துக்கு விரைந்த மானிப்பாய் பொலிஸார் கொரோனா காலத்தில் ஆலயத்தில் இவ்வாறு ஒன்றுகூட முடியாது என்று கூறி அனைவரையும் வெளியேற்றினர். சம்பவத்துடன் தொடர்புடையவர்கள்விசாரணைக்காக மானிப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-111)

# பொலிஸ் அதிகாரிகள் அறுவருக்கு மாற்றல்!

கொழும்பு, மே 24
மூத்த பொலிஸ் அதிகாரிகள் அறுவர் உட்பட 11 பொலிஸ்உத்தியோகத்தர்களுக்கு அத்தியாவசிய சேவை கருதி இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதற்கமைய குற்றப்புலனாய்வு திணைக்கள பணிப்பாளராக சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி ஏ.ஆர்.பீ.ஜே.அல்விஸ் நியமிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.
குற்றப் புலனாய்வு திணைக்கள பணிப்பாளராக கடமையாற்றிய மூத்த பொலிஸ் அதிகாரி டபிள்யூ.திலகரத்ன அமைச்சர்கள் பாதுகாப்பு பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவின் புதிய பணிப்பாளராக மூத்த பொலிஸ் அதிகாரி டி.ஜி.என்.டபிள்யூ.டி.தல்துவ நியமிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.
அவர் இதற்கு முன்னர் கடமையாற்றிய மேல்மாகாண புலனாய்வு பிரிவின் பணிப்பாளர் பதவிக்கு சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி எச்.பீ.ஏ.புஸ்பகுமார நியமிக்கப்பட்டுள்ளார். மூத்த பொலிஸ் அதிகாரி கே.ஜி.எல்.கீதால் சிறப்பு புலனாய்வு பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்னர் அவர் நுகேகொட பகுதிக்கு பொறுப்பானவராக கடமையாற்றினார்.
அமைச்சர்களின் பாதுகாப்பு பிரிவின் பணிப்பாளராக கடமையாற்றிய மூத்த பொலிஸ் அதிகாரி டபிள்யூ.எச்.பி.அஜித் ஹெசிறி பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
இந்த இடமாற்றங்களுக்குத் தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளது என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.
இவர்களைவிட மேலும் மூன்று பொலிஸ் அதிகாரிகளுக்கும் மற்றும் இரண்டு உதவி பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

# பொன்சேகாவுக்கு கொடுத்த காணியைப் பறித்தது அரசு!

முன்னாள் இராணுவத் தளபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுக்குக் கடந்த அரசு குத்தகை அடிப்படையில் வழங்கியிருந்த காணி ஒன்று தற்போதைய அரசால் மீளப் பெறப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
கொழும்பு, நாரஹென்பிட்டியில், கிரிமண்டல மாவத்தையில் உள்ள இந்தக் காணியை முன்னாள் இராணுவத் தளபதியின் பாதுகாப்புப் பிரிவினர் பயன்படுத்தியிருந்தனர். அதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை கடந்த ஆட்சியில் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராக இருந்த சம்பிக்க ரணவக்க சமர்ப்பித்திருந்தார்.
தற்போது அந்தக் காணி, காணி அபிவிருத்தி அதிகார சபையால் மீளப் பெறப்பட்டுள்ளது என்றும், அதற்கான கடிதம் சரத் பொன்சேகாவுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஏ)

# பொலிஸாருக்கு எதிராக கவனவீர்ப்பு

கிளிநொச்சி,மே 24
பொலிஸாருக்கு எதிராக கிளிநொச்சி யூனியன்குளம் குடியிருப்பு மக்கள் கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
கடந்த மாதம் 28 ஆம் திகதி குறித்த பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்று தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என தெரிவித்தும், பாதிக்கப்பட்ட நபர் நீண்டகாலமாக யாழ்ப்பான வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சந்தேகநபர்களுக்குப் பொலிஸார் பாதுகாப்பு வழங்கியதாகவும், அவர்களைக் கைது செய்து நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிவித்தும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
தாக்குதலில் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் தலையில் வெட்டுக்குள்ளானார். குறித்த நபருக்கு எதிர்வரும் 16 ஆம் திகதி சத்திர சிகிச்சை இடம்பெறவுள்ள நிலையில், அதற்கு நீதி கோரி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



தாக்குதல் சம்பவம் தொடர்பில் சாட்சியம் அளித்த நபர்களை இலக்கு வைத்து கடந்த வியாழக்கிழமை கைதுகள் இடம்பெற்றன. பின்னர் தாக்குதல் மேற்கொண்ட நபரின் வீட்டைத் தாக்கியதாக தெரிவித்து சாட்சியாளர்களை இலக்குவைத்தே கைதுகள் இடம்பெற்றன என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.
பொலிஸார் பக்கச் சார்பாக நடந்து கொள்கின்றனர். 15வயதுடைய பாடசாலை மாணவனை விலங்கிட்டு நீதிமன்றுக்கு அழைத்து வந்துள்ளனர் என்றும் அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். பொலிஸாரின் பக்கசார்பான செயற்பாடுகளைக் கண்டிக்கும் வகையில் பிரதேச மக்களால் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
கொரோனா தொற்று அச்சுறுத்தல் நிறைந்த காலப்பகுதியில் சமூக இடைவெளியைப் பேணியவாறு மக்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (க-6)

# தமிழர் மீதான இனப்படுகொலை முன்னறிவித்தலே கோத்தா உரை!

## வடக்கு முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு



**கொழும்பு, மே 24**

**இன அழிப்பின் பின்னரும் தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக தொடர்ந்து போராடிவரும் நிலையில், எதிர்காலத்தில் மிக மோசமான கட்டமைப்பு சார் இனப்படுகொலை ஒன்றும் ஏனைய மனித உரிமை மீறல்களும் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெறப்போவ தற்கான ஒரு முன் அறிகுறியாகக் கூட ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் போர் வெற்றி நாள் அறிவிப்புக்கள் இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது.**

இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்றுமுன்தினம் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தில் எனது உரையின்போது பின்வருமாறு நான் கூறியிருந்தேன். "ஐ. நா மனித உரிமைகள் சபையினூடான பொறுப்புக் கூறல் முன்னெடுப்புக்கள் இதுவரையில் தோல்வியை அடைந்துள்ள நிலையில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ஐ. நா மனித உரிமைகள் சபையினை இலங்கை அரசு முற்றாக ஏமாற்றி உதாசீனம் செய்துள்ள நிலையில், ஐ. நா. பொதுச் சபையில் இருந்து இலங்கையின் உறுப்புரிமையை இரத்துச் செய்வதற்கு சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கூறி வைக்கின்றேன்.

இந்த நிலமை மிக விரைவில் ஏற்படப் போகின்றது என்று நினைத்தாரோ என்னவோ ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ இம்மாதம் 19ஆம் திகதி நடைபெற்ற போர் வெற்றிவிழா கொண்டாட்டத்தில் "எமது நாட்டுக்கு அநீதியான வகையில் ஏதேனும் ஒரு சர்வதேச நிறுவனம் அல்லது சர்வதேச அமைப்பு தொடர்ந்தும் செயற்படுமாக இருந்தால் அந்த நிறுவனத்தின் அல்லது அமைப்பின் உறுப்புரிமையிலிருந்து இலங்கையை விலக்கிக் கொள்ள நான் ஒரு போதும் பின்நிற்கப் போவதில்லை" என்று தெரிவித்துள்ளார்.

எனவே இலங்கை குற்றம் புரிந்து கொண்டிருப்பதை உலகம் அறிந்துள்ளது என்று கண்டே வீராப்பாகக் கதைக்கத் தொடங்கியுள்ளார் ஜனாதிபதி என்று புலப்படுகிறது. வரப் போவதைத் தடுக்க அவருக்கு வேறுவழி தெரியவில்லை போலும். அவர் ஆற்றிய உரை போர்க் குற்றவாளிகளைக் காப்பாற்ற எத்தகைய துன்பத் துக்குள்ளும் இலங்கையை கொண்டு போக அவர் துணிந்துவிட்டார் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

போர் வெற்றிவிழா கொண்டாட்டத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆற்றியுள்ள உரை வரலாற்றின் அடிப்படையில் புரையோடிப் போயிருக்கும் இந்த நாட்டின் இன முரண்பாட்டை கிஞ்சித்தும் கவனத்தில் எடுக்காமல் அலட்சியம் செய்து, படையினருக்கு எதிராக செயற்பட்டால் சர்வதேச நிறுவனங்களில் இருந்து வெளியேற போவதாகவும் எச்சரிக்கை செய்துள்ளமை எத்தகைய ஒரு துன்பத்துக்குள் இலங்கை எதிர்காலத்தில் சிக்கித் தவிக்கப்போகின்றது என்பதையே காட்டுகின்றது.

ஆனால் போர் குற்றவாளிகளே இன்றைய இலங்கையின் ஆட்சியாளர்கள். அவர்கள் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக இனவாதத்தையும் போலி தேசியவாதத்தையும் மூலோபாயமாக பயன்படுத்தி வருவதன் ஒரு எதிரொலி தான் இது. இந்த சிந்தனையுடன் செயற்படும் அவர்களால், ஒருபோதும் நாட்டைப் பற்றிச் சிந்தித்து, வளமான ஒரு நாட்டை தூர நோக்கச் சிந்தனையுடன் ஏற்படுத்தி கொடுக்க முடியாது. அத்த கையவர்களிடம் இருந்து இவ்வாறான கருத்துக்கள் வெளிவருவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமேயில்லை.

பாதிக்கப்பட்ட நாம் கூட இலங்கையை சர்வதேசத்தில் இருந்து தனிமைப்படுத்துவதனூடாக சர்வதேச போர்க் குற்ற விசாரணைக்கான அழுத்தங்களை ஏற்படுத்த முடியும் என்ற அடிப்படையிலேயே அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றோம்.

அதனால்தான், இலங்கையை ஐ. நா உறுப்புரிமை இருந்து நீக்கும்படி சர்வதேச சமூகம் மற்றும் ஐ. நா வை நான் வலியுறுத்தி வருகின்றேன். ஆனால், இலங்கையை சர்வதேச அரங்கில் இருந்து தனிமைப்படுத்துமாறு நாம் கோரும் நிகழ்ச்சி நிரலுக்கும் அரசு சர்வதேச அமைப்புக்களில் இருந்து விலக நேரிடும் என்று விடுத்துள்ள எச்சரிக்கையின் பின்னால் இருக்கக்கூடிய நிகழ்ச்சி நிரலுக்கும் இடையில் பெரும் வித்தியாசம் இருக்கிறது.

எமது மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைக்கு நீதியை பெற்று அதன் மூலம் ஒரு நிலையான அமைதியை இலங்கையில் ஏற்படுத்த நாம் முயற்சிக்கிறோம். ஆனால், தாம் நிகழ்த்திய இனப்படுகொலையில் இருந்து தப்புவதற்கும் தொடர்ந்து எமக்கு எதிராக கட்டமைப்பு சார் இனப்படுகொலையை நிகழ்த்துவதற்கும் அரசு முயலுகின்றது.

சர்வதேச அமைப்புக்கள் மற்றும் மனித உரிமை கடப்பாடுகளில் இருந்து விலகுவதன் மூலம் இவற்றை அடையலாம் என்பது ஆட்சியாளர்களின் எதிர்பார்ப்பு.

சர்வதேச அமைப்புக்களில் இருந்து விலக நேரிடும் என்று அரசு அறிவித்துள்ளமை 2008ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் கடும் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சர்வதேச அமைப்புக்கள் மற்றும் மனிதாபிமான அமைப்புக்களை வன்னியில் இருந்து வெளியேறுமாறு அரசு பணித்தமை நினைவுக்கு வருகின்றது.

சர்வதேச அமைப்புக்களை வன்னியில் இருந்து வெளியேற்றிவிட்டு சாட்சி இல்லா போர் ஒன்றை நடத்தி எமது மக்களை அரசு இன அழிப்புக்கு உள்ளாக்கியது. அரசு, அப்போது சர்வதேச அமைப்புக்களை வன்னியில் இருந்து வெளியேற்றியபோது பெரும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறும் என்று எச்சரிக்கைவிடுக்கப்பட்டிருந்தபோதிலும் ஐ. நா மற்றும் சர்வதேச சமூகம் ஆகியவை கோட்பாடுகளுக்கு அமைவாக உரிய முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையே இன அழிப்பு நடைபெறுவதற்கு வழிகோலியது.

இன அழிப்பின் பின்னரும் தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக தொடர்ந்து போராடிவரும் நிலையில், எதிர்காலத்தில் மிக மோசமான கட்டமைப்பு சார் இனப்படுகொலை ஒன்றும் ஏனைய மனித உரிமை மீறல்களும் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெறப்போவதற்கான ஒரு முன் அறிகுறியாகக் கூட ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் போர் வெற்றி நாள் அறிவிப்புக்கள் இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

ஆகவே, முன்னர் போல அல்லாமல் ஐ. நா மற்றும் சர்வதேச சமூகம் இந்த அறிவிப்பு குறித்து தீவிரமான கவனம் செலுத்தவேண்டும். இதனை அலட்சியம் செய்யாமல் தமிழ் மக்களைப் பாதுகாக்கும் முன் ஏற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

அதேவேளை, நடைபெற்ற இனப்படுகொலையை சர்வதேச ரீதியில் சுயாதீனமாக விசாரணை செய்வதற்கும் காலம் தாழ்த்தாமல் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்று நடைபெறுமானால் எமது அப்பாவி சிங்களச் சகோதரர்களுக்கு இறுதிப் போரில் என்ன நடந்தது என்பதை உணர்த்தி அவர்களின் பௌத்த தர்மம் காட்டும் வழியில் எமக்கான பரிகார நீதியை பெற்று இணைந்த வடக்கு கிழக்கில் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வு ஒன்றினை காண முடியும் என்று நம்புகின்றேன். இதன் மூலம், சுபீட்சமான இலங்கையை கட்டியெழுப்பலாம்.

நீதித்துறையின் சட்டம் கூட இருவேறாக தென் இலங்கைக்கும் வடக்கு கிழக்கிற்கும் பிரயோகிக்கப்படுகின்றது. நினைவு கூரல் நிகழ்வுகளில் கலந்துகொண்டவர்கள் மீது கோரோனா தனிமைப்படுத்தல் விதி முறைகள் பாய்கின்றன. ஆனால், தென் இலங்கையில் போர் வெற்றி விழா கொண்டாடுபவர்கள் மீது எந்த சட்டமும் பாய்வதில்லை. ஆகவே, இலங்கைத் தீவை இரண்டாகப் பிரிக்கும் வகையில் உண்மையாகவே செயற்படுவது யார் என்று கேள்வி கேட்க விரும்புகிறேன்.

ஜனாதிபதி தற்போது தாம் இராணுவத்தில் இல்லை என்பதையும் இந்த நாடு முழுவதற்கும் அதில் வாழும் மக்களுக்கும் பொறுப்புக் கூறவேண்டிய ஒரு உன்னத பதவியை அவர் வகிக்கின்றார் என்பதையும் தயவுசெய்து இனியாவது மனதில் நிலை நிறுத்துவாராக- என்றுள்ளது. (ஏ)



## சீரமைக்கப்படுகிறது குடமுருட்டிப் பாலம்

கொடிகாமம், மே 24

இனந்தெரியாத நபர்களால் களவாடப்பட்ட பரந்தன்-பூநகரி வீதியில் உள்ள குடமுருட்டி இரும்புப் பாலத்தின் திருத்த வேலைகள் நேற்றுச் சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் சி.எம்.மொறாயஸின் நேரடிக் கண்காணிப்பில் பாகங்களைப் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. (ப-159)



## திருமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் விசேட கலந்துரையாடல்

திருகோணமலை, மே 24

திருகோணமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியின் ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்களுக்கு மீண்டும் பாடசாலை ஆரம்பிக்கும் போது எடுக்கப்படவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கமளிக்கும் விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கல்லூரியின் அதிபர் திருமதி. சுபத்ரா ஜான் தேவதாஸ் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் பொதுச் சுகாதார உத்தியோகத்தர் ஜெகனால் ஆசிரியர்களுக்கு கொரோனா வைரஸ் தாக்கம் பற்றியும் அதனால் முகக்கவசம் அணிவதன் அவசியம் பற்றியும் பாடசாலையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் சமூக இடைவெளியின் முக்கியத்துவம் பற்றியும் சுகாதார நடவடிக்கைகள் பற்றியும் விசேட விழிப்புணர்வு கலந்துரையாடல் இடம் பெற்றது. (ப)

## குருதிக் கொடை முகாம்

யாழ்ப்பாணம், மே 24

கரும்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையம், இந்து இளைஞர் கழகம் மற்றும் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் குருதிக் கொடை முகாம் நடைபெறவுள்ளது.

குருதிக் கொடை முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை கரும்பனை கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படுவதால் குருதிக்கொடையாளர்களுக்கு போக்குவரத்து ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படவுள்ளன. மேலதிக விவரங்களுக்கு 0773241755, 0772988917 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-222)



# நினைவுகூர்தல் 2020

நிலாந்தன்

கிட்டத்தட்ட 7 ஆண்டுகளுக்கு மேலாக இதே தலைப்பில் நினைவுகூர்தல் தொடர்பாக எழுதிவருகிறேன். ஆனால் தாயகத்தில் நினைவுகூர்தல் தொடர்பில் கடந்த 11 ஆண்டுகளாக குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பெரிய திருப்திகரமான மாற்றங்கள் ஏதும் ஏற்பட்டிருப்பதாக தெரியவில்லை. நினைவுகூர்தலை அதன் கோட்பாட்டு அர்த்தத்தில் அதன் ஆழமான பொருளில் விளங்கி முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் கடந்த 11 ஆண்டுகளாக குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு வளர்ச்சியை அடைந்திருப்பதாக தெரியவில்லை.

முதலாவதாக நினைவுகூர்தல் என்றால் என்ன ?

அது தனியே கொல்லப்பட்ட மக்களை நினைவுகூர்வது மட்டும் அல்ல. கொல்லப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெறுவதற்கான ஒரு போராட்டத்திலிருந்து பிரிக்கப்படவியலாத ஒரு பகுதியே நினைவுகூர்தலாகும். 2009க்குப் பின்னரான தமிழ் அரசியல் எனப்படுவது அதுதான். இனப்படுகொலைக்கு எதிரான நீதியைப் பெறுவது.

இந்த ஆழமான விளக்கத்தின் அடிப்படையில் நினைவுகூர்தலை ஒழுங்குபடுத்தினால் அதை ஆகக்கூடியபட்சம் மக்கள்மயப்படுத்த வேண்டியிருக்கும். ஏனெனில் இனப்படுகொலைக்கு எதிரான நீதியைப் பெறுவதற்கான போராட்டம் எனப்படுவது பெருந்திரளுக்குரியது. சிறுதிரளுக்குரியது அல்ல. தனிய கட்சிகளுக்கு மட்டும் உரியது அல்ல. ஒரு ஏற்பாட்டு குழுவுக்கு மட்டும் உரியது அல்ல. இவை எல்லாவற்றுக்கும் அப்பால் அது முழுத் தமிழ் சமூகத்துக்கும் உரியது.

இன்னும் ஆழமாகச் சொன்னால் அது பெருந்தமிழ்ப் பரப்பில் உள்ள எல்லாருக்கும் உரியது. தாயகம் தமிழகம் புலம்பெயர்ந்த தமிழ் பரப்பு ஆகிய மூன்றும் இணைந்து முன்னெடுக்க வேண்டிய ஒரு போராட்டம் அது.

அது எவ்வளவுக்கு எவ்வளவு மக்கள் மயப்படுத்தப்படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு மக்களும் நீதியைப் பெறுவதற்கான போராட்டத்தில் திரள் ஆகின்றார்கள். அவ்வளவுக்கு அவ்வளவு அந்தப் போராட்டமும் பலமடையும். அதில் எவ்வளவுக்கு எவ்வளவு தமிழகத்தையும் இந்தியாவில் இருக்கக்கூடிய முற்போக்கு சக்திகளையும் இணைக்க முடிகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நீதிக்கான போராட்டமும் புவிசார் அரசியலில் அடுத்தகட்ட திருப்பங்களை அடையும். எவ்வளவுக்கெவ்வளவு அதில் புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தின் பங்களிப்பு அதிகரிக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அனைத்துலக அரங்கிலும் நீதியைப் பெறுவதற்கான போராட்டம் பலமடையும்.

கடந்த பதினொரு ஆண்டுகால நடைமுறை எனப்படுவது அதைத்தான் காட்டுகிறது. உலகம் நடந்தது இனப்படுகொலை என்பதனை இன்று வரையிலும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஐ.நா போன்ற உலகப் பொது அமைப்புகளும் அதை இனப்படுகொலை என்று ஏற்றுக்கொள்ளவில்லை. இந்நிலையில் தமிழக சட்டசபையில் அமரர் ஜெயலலிதா ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார் .வடமாகாணசபையில் விக்னேஸ்வரன் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார். இவை தவிர கனடாவில் ஒரு உள்ளூராட்சி சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இம்மூன்று தீர்மானங்களும் நடந்தது இனப்படுகொலையே என்று பிரகடனப்படுத்தியுள்ளன. இம்மூன்று தீர்மானங்களுக்கும் பின்னுள்ள அரசியல் உள்நோக்கங்கள் குறித்து கருத்துக்கள் வேறுபடலாம். ஆனால் இம் மூன்று தீர்மானங்க ளும் முக்கியத்துவம் மிக்கவை. முதலாவதாக தமிழக சட்டசபை. பெருந்தமிழ் பரப்பில் உள்ள மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட மிகப்பெரிய சட்டசபை அது. எனவே அத்தீர்மானத்துக்கு ஒரு மக்கள் ஆணை உண்டு. அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எனப்படுவது தமிழகத்தின் தீர்மானம். எனவே அதற்கு சட்ட ரீதியான ஒரு வலு இருக்கிறது. இது முதலாவது.

இரண்டாவது வடமாகாண சபையின் தீர்மானம். அதுவும் வடமாகாண மக்களின் ஆணையைப் பெற்ற ஒரு தீர்மானம். மற்றது கனடாவில் ஒரு உள்ளூராட்சி சபையின் தீர்மானம். அதற்கும் மக்கள் ஆணை உண்டு. சிறிய மற்றும் பெரிய சபைகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்களில் நிறைவேற்றப்பட்ட இம் மூன்று தீர்மானங்களும் மூன்று வெவ்வேறு அரசியல் பரப்புகளுக்குரியவை. ஒன்று தாயகம் மற்றது தமிழகம் மூன்றாவது டயஸ்போறா.

இம்மூன்று தீர்மானங்களையும் தொடக்கமாக எடுத்துக் கொண்டு அடுத்த கட்டத்துக்கு முன்னேறலாம். அதற்கு என்ன செய்ய வேண்டும்? முதலாவதாக இதுபோன்ற தீர்மானங்களுக்கு ஆணை வழங்கிய மக்கள் மத்தியில் நினைவுகூர்தலைப் பரவலாக்க வேண்டும். இரண்டாவதாக இனப்படுகொலை என்று நிறுவத் தேவையான சான்றாதாரங்களை விஞ்ஞானபூர்வமாகத் தொகுத்து சட்டபூர்வமாக முன்வைக்கவேண்டும்.


முதலாவதாக நினைவுகூர்தலை மக்கள் மயப்படுத்த வேண்டும். கடந்த பதினொரு ஆண்டுகளாக நினைவுகூர்தலைப் போதிய அளவுக்கு மக்கள் மயப்படுத்த முடியவில்லை. ஏனெனில் தாயகத்தில் அதற்குரிய பலமான கட்டமைப்பு எதுவும் உருவாக்கப்படவில்லை. இப்போதிருக்கும் கட்டமைப்பை அதன் அடுத்தடுத்த கட்டங்களுக்குப் பலப்படுத்த வேண்டும். மிகப் பரந்த தளத்தில் நினைவுகூர்தல் சமூகமயப்படுத்தப்பட வேண்டும். தாயகத்தில் அதைச் செய்வதுதான் ஒப்பீட்டளவில் கடினமாக இருக்கும். ஏனெனில் ஒப்பீட்டளவில் பாதுகாப்பு குறைந்த ஓர் அரசியல் சூழல்தாயகத்தில்தான் உண்டு. எனவே நினைவுகூர்தலைப் பரவலாக்கி மக்கள் மயப்படுத்தும் வேலைகளை பொறுத்தவரை தாயகத்தில் பொருத்தமான தரிசனங்களை கொண்டவர்கள் ஏற்பாட்டுக்குழுவைப் பலப்படுத்த வேண்டும்.

தமிழகத்திலோ அல்லது புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலோ அதை ஒருங்கிணைப்பது ஒப்பீட்டளவில் இலகுவானது. ஏனெனில் முழுப்பெருந் தமிழ்ப் பரப்பையும் ஒரு புள்ளியில் இணைக்கும் உணர்ச்சிகரமான விடயம் இது. எனவே அதை டயஸ்போராவிலும் தமிழகத்திலும் தமிழர்கள் செறிந்து வாழும் உலகின் ஏனைய பகுதிகளிலும் பரவ

> கொல்லப்பட்ட மக்களை நினைவு கூர்வது மட்டும் அல்ல. கொல்லப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெறுவதற்கான ஒரு போராட்டத்திலிருந்து பிரிக்கப் படவியலாத ஒரு பகுதியே நினைவு கூர்தலாகும். 2009 க்குப் பின்னரான தமிழ் அரசியல் எனப்படுவது அதுதான். இனப் படுகொலைக்கு எதிரான நீதியைப் பெறுவது.







**இம்முறை நினைவுகூர்தலைப் பொறுத்தவரை கொவிட்-19 ஒரு பெரிய தடையாகக் காணப்பட்டது. எனினும் புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகங்கள் ஒப்பீட்டளவில் வேர்ச்சுவலாக ஒருங்கிணைந்தன. தாயகத்தைப் பொறுத்தவரை அப்படிப்பட்ட ஒருங்கிணைப்பு இருக்கவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து ஏழு சோதனைச் சாவடிகளைக் கடந்து முல்லைத்தீவுக்குப் போக வேண்டி இருந்தது. சோதனைச் சாவடிகளில் கெடுபிடிகள் யுத்த காலங்களில் இருந்தவை போல இறுக்கமாக இருந்தன.**



லாக்கி மக்கள் மயப்படுத்துவது ஒப்பீட்டளவில் இலகுவானது. எனவே இது விடயத்தில் ஏற்பாட்டு குழுவானது தாயகத்திலிருந்து தொடங்கி தமிழகம் டயஸ்போரா ஆகிய பகுதிகளுக்கும் கிளை பரப்ப வேண்டும்.

இவ்வாறு முழுப்பெருந்தமிழ் பரப்பிலும் நினைவுகூர்தலை உணர்ச்சிகரமாக ஒன்றிணைத் தால் அடுத்த கட்டமாக அறிவுபூர் வமாக சான்றாதாரங்கள் திரட்டு வது இலகுவாகிவிடும். இதுவிட யத்தில் ஏற்கனவே தமிழ் டயஸ் பொறா கடந்த 11 ஆண்டுகளாக உழைத்து வருகிறது. சான்றாதா ரங்களை திரட்டி விஞ்ஞானபூர்வ மாக தொகுத்து சட்டபூர்வமாக முன்வைப்பது. இது அறிவுபூர்வமான ஒருவேலை. ஆனால் இதற்கு தேவையான ஊக்கசக்தியை நினைவுகூர்தல் வழங்குகிறது. அது எவ்வளவுக்கு எவ்வளவு மக்கள் மயப்படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அந்தக் கூட்டுக்கோபம் கூட்டு ஆக்க சக்தியாக மாறும்.

இம்முறை நினைவுகூர்தலைப் பொறுத்தவரை கொவிட்19 ஒரு பெரிய தடையாகக் காணப்பட்டது. எனினும் புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகங்கள் ஒப்பீட்டளவில் வேர்ச்சுவலாக ஒருங்கிணைந்தன. தாயகத்தைப் பொறுத்தவரை அப்படிப்பட்ட ஒருங்கிணைப்பு இருக்கவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து ஏழு சோதனைச் சாவடிகளைக் கடந்து முல்லைத்தீவுக்குப் போக வேண்டி இருந்தது, சோதனைச் சாவடிகளில் கெடுபிடிகள் யுத்த காலங்களில் இருந்தவை போல இறுக்கமாக இருந்தன.

நினைவுகூர்தலுக்கு முதல் நாள் அதாவது 17 ஆம் திகதி புதுக்குடியிருப்பு பகுதிகளில் படைத்தரப்பு பொலிஸாரும் இணைந்து முச்சக்கரவண்டிகளில் ஒலிபெருக்கிகள் மூலம் அடுத்தநாள் மக்கள் ஒன்று கூடுவதற்கு எதிராக அறிவித்திருக்கிறார்கள். அடுத் தநாள் மக்கள் வெளியில் நடமாடுவதை குறைத்துக் கொள்ளவேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதனால் நினைவுகூரும் இடத்தில் அந்த மாவட்டத் தைச் சேர்ந்தவர்களே பெருமளவிற்கு ஒன்றுகூட முடிந்தது. நூற்றுக்கும் அதிகமான தொகையினர் ஒன்று கூடியுள்ளார்கள்.

நினைவுகூரும் வேளையிலும் அங்கேயே நெருக்க டிகள் கொடுக்கப்பட்டன. பொதுச் சுகாதாரப் பரிசோ தகர்களை நினைவுகூரும் இடத்திற்கு அழைத்துக் கொண்டு வந்த பொலிஸார் சனங்கள் சுகாதார ஏற் பாடுகளை பின்பற்றவில்லை என்பதை காரணமாகக் காட்டி ஒன்றுகூடலைக் குழப்ப முயற்சித்த தாகக் கூறப்படுகிறது. ஆனால் பொதுச்சுகாதார பரிசோத கர்கள் அது விடயத்தில் கொவிட்19க்கு எதிரான பாது காப்பு நடைமுறைகளை ஏற்பாட்டுக் குழு பெருமள வுக்கு பின்பற்றி இருந்ததை ஏற்றுக்கொண்டிருக்கி றார்கள். மாஸ்க் அணிந்திருந்தமை, தனியாள் இடைவெளிகளைப் பேணியமை போன்றவற்றில் கூடியிருந்த மக்களிடம் குற்றம் காணமுடியவில்லை. எனவே மக்கள் ஒன்று கூடுவதைத் தடுக்கவும் முடிய வில்லை. மேலும் நெருக்கடிகளைக் கொடுப்பதன் மூலம் நிகழ்வில் பெருந்திரளானவர்கள் கூடுவதைத் தடுத்த பொலிஸ் அம்மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் சிறிய அளவில் கூடுவதை உத்தியோகப்பற்றற்ற விதத்தில் அனுமதித்ததாகவும் கருதலாம்.

அதேசமயம் ஏனைய தமிழ் பகுதிகளில் மக்களை தத்தமது வீடுகளில் விளக்கேற்றி நினைவுகூருமாறு சிவில் அமைப்புகள் கேட்டிருந்தன. மேலும் எல்லா வழிபாட்டுத் தலங்களிலும் ஒரு குறிப்பிட்ட நேரத் துக்கு மணிகளை ஒலிக்குமாறும் கோரப்பட்டது. ஆனால் இந்த கோரிக்கைகள் பெருமெடுப்பில் நிறை வேற்றப்படவில்லை. பொதுமக்கள் துணிந்து முன் வந்து விளக்குகளை வீட்டுக்கு வெளியில் ஏற்ற வில்லை.

பொது நிறுவனங்கள் குறிப்பாகக் கட்சிகளே அவ் வாறு விளக்குகளை ஏற்றின. இதுவிடயத்தில் கட்சிக ளுக்கும் பொலிசாருக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. கட்சிகளைப் பொறுத்தவரை தடையை மீறி விளக்குகளை ஏற்றியது ஒரு சாகசம் கலந்த வெற்றியாக கருதப்படுகிறது. ஆம். அது ஒரு துணிச்சலான எதிர்ப்புத்தான். ஆனால் நினைவு கூர்தல் எனப்ப டுவது கட்சிகளின் சாகசச் செயல் மட்டுமல்ல. அதற்கும் அப்பால் அது மக்கள் மயப்பட்ட ஒரு நிகழ் வாகத் திட்டமிடப்பட வேண்டும்.

கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் நிலவிய அசாதாரணச் சூழ்நிலை கள் காரணமாக அவ்வாறு திட்ட மிட முடியவில்லை என்று கூறக் கூடும். ஆனால் இதற்கு முன் னரே 9 ஆண்டுகளாக நினைவு கூர்த்தலை மக்கள்மயப்படுத்த முடியவில்லை என்பதனை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

மக்கள் மயப்படாத காரணத்தால்தான் அதைக் கட்சி கள் மட்டும் துணிச்சலான சாகசச் செயல்களாக முன்னெடுக்கும் ஒரு நிலைமை காணப்படுகிறது. மக்கள் மயப்படாத காரணத்தால்தான் ஒரு நோய்த் தொற்றுக் காலத்திலும் அதனை மானசீகமாக அனுஷ்டிக்க முடிய வில்லை.

தமிழ் பகுதிகளில் உள்ள ஆலயங்கள் மாணவர் படிக் கும் நேரங்களில் ஒலிபெருக்கிகளை அலறவிட்டு மாணவர்களைக் குழப்புவது உண்டு, அது ஒரு சத்த மாசாக்கம். நொய்ஸ் பொலியுஷன். இவ்வாறு பரீட் சைக் காலங்களில் ஒலிபெருக்கிகளைக் கதறவிடும் பெரும்பாலான ஆலயங்கள் இப்படி ஒரு தருணத்திற் காக ஒரு முடிவெடுத்து ஒரே நேரத்தில் மணிகளை ஒலிக்கத் தவறிவிட்டன.

யாழ். சர்வமதப் பேரவை கேட்டுக்கொண்டதற்கிணங்க மிகச்சில ஆலயங்களிலேயே மணியொலி கேட்டது. அது ஒரு கூட்டு ஓசையாக முழு சமூகத்திற்கும் முழு உலகத்துக்கும் ஒரு செய்தியை கூறும் விதத்தில் வலி மையானதாக கேட்கவில்லை. பெரும்பாலான ஆலய நிர்வாகங்கள் மத நிர்வாகங்கள் இதுவிடயத் தில் போதிய அளவிற்கு ஒத்துழைக்கவில்லை என் பதே உண்மை. இதுதான் இந்த ஆண்டு நினைவு கூர்தல். அதுமட்டுமல்ல எப்பொழுது விளக்கேற்ற வேண்டும் எப்பொழுது மணி ஒலிக்க வேண்டும் என் பதில் கட்சிகளுக்கிடையேயும் அமைப்புகளுக்கு இடையேயும் ஒருமித்த தீர்மானம் இருக்கவில்லை. ஒரு கட்சி ஆறு 18க்கு என்று அறிவித்தது. பெரும்பா லான பொது அமைப்புகள் ஏழு மணிக்கு என்று அறிவித்தன.

யாழ். சர்வமதப் பேரவை ஆறு 15க்கு என்று அறிவித் தது. கூட்டமைப்பு 8 மணிக்கு மணி ஒலிக்க வேண் டும் என்று அறிவித்தது. தமிழ் மக்கள் பேரவை 6 மணிக்கும் 7 மணிக்கும் இடையே என்று அறிவித் தது. இப்படித்தான் தமிழ் பொது அமைப்புகளும் கட்சிகளும் தமிழ் மக்களுக்கு வழிகாட்டின. இந்த குழப்பம் காரணமாக ஒரே நேரத்தில் மணிகளை ஒலிக்கச் செய்து முழுச் சமூகத்தையும் உணர்வுபூர் வமாக ஒன்றிணைக்க முடியவில்லை. இப்படித்தான் இந்த ஆண்டு தாயகத்தில் நினைவுகூர்தல் அனுஷ் டிக்கப்பட்டது. அதாவது மக்கள் பயப்படாத ஒரு நினைவுகூர்தல்.



# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான மாதிரி வினாப்பத்திரம்

இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக. (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன.)

- சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

## உதயன் பயிற்சிப் பரீட்சை – 4


**பகுதி– I**


ஆக்கம்: த.தயானந்தன்
அதிபர்
யா/கீரிமலை நகுலேஸ்வரா வித்தி.

நேரம்: 45 நிமிடம் பெயர்: ............................... . பாடசாலை: ...............................................


**மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக**

**1ஆம் 2ஆம் ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை ஒத்த உருவைத் தெரிவு செய்க.**

1) 

2) 

**3,4ஆகிய வினாக்களில் காட்டப்பட்டுள்ள உருக்கள் ஒரு குறித்த இயல்புக்கேற்ப இரு கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அக்கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.**


03) 

A B C D

1.ACஉம் BD உம் 2. ABஉம் CDஉம் 3. AD உம் BC உம்

04) 

A B C



D E F

1. ADF உம்BCE உம்
2. ACF உம்BDE உம்
3. ACE உம்BDF உம்

**5,6 ஆகிய வினாக்களில் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**


5) புத்தகத்துக்கும் பத்திரிகைக்கும் கண் போன்று வானொலிக்கும் தொலைபேசிக்கும்....................


1. கேட்டல் 2. காது 3.மின்சாரம்

6) பேருந்துக்கும் காருக்கும் சாரதி போன்று ஆகாய விமானத்துக்கும் உலங்கு வானூர்திக்கும்............

1. மாலுமி 2. விஞ்ஞானி 3.விமானி


7).வெறுமையான அடைப்புக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க






(1) (2) (3)

8) இவ்வுருவில் எத்தனை சதுரங்களை இனங்காண முடிகிறது




1) 6
2) 10
3) 14

9)இவ்வுருவை மடித்து ஒரு பெட்டியைச் செய்யும் போது தோன்றும் விதம் யாது?



10) வெற்றிடத்துக்குப் பொருத்தமான எண்




1) 5 2)6 3)7

11) ஒரு கவிதையின் நான்கு வரிகள் உழுங்கின்றித் தரப்பட்டுள்ளன.

**A– பாலை நக்கிக் குடித்திடுமே**
**B– கறுப்பு நிறக் குட்டிதான்**
**C– பாய்ந்து பாய்ந்து ஓடுதே**
**D– காலடியில் வந்ததுவே**

கருத்துள்ளவாறு இவற்றை ஒழுங்குபடுத்தும் போது சரியான ஒழுங்கு முறை

1) B,C,D,A 2)B,D,A,C 3) B,C,A,D


12) நான்கு மணித்தியாலயங்களுக்கு ஒரு தடவை ஒலிக்கின்ற ஒரு கடிகாரம் உள்ளது. அது மு.ப.7.00 இற்கு ஒலித்தது. அது அடுத்ததாக ஒலிக்கும் இரண்டு சந்தர்ப்பங்களைத் தருக.

1) மு.ப. 10.00 உம் பி.ப.2.00 உம்
2) மு.ப. 11.00உம் பி.ப.4.00 உம்
3) மு.ப. 11.00 உம் பி.ப.3.00 உம்

13)இன்று நள்ளிரவு நேரங்களில் மத்திய, சம்பிரகமுவ மாகாணங்களில் இடையிடையே இடியுடன் கூடிய மழை பெய்யுமென வளிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ளது. இவ்வறிவித்தலுக்கு அமைய மழை பெய்யக்கூடிய நகரங்கள் முறையே

1. மாத்தளை,பதுளை
2. நுவரெலியா , இரத்தினபுரி
3.குருநாகல்,கண்டி

இந்த வென்வரிப்படமானது தரம் 5 மாணவர்களின் செல்லப் பிராணிகள் வளர்க்கும் விருப்பைக் காட்டுகிறது.




14) மூன்று பிராணிகளையும் விரும்புவோர் எண்ணிக்கை யாது?

1)3 2) 24 3)10

15) நாயை மட்டும் வளர்க்க விரும்புவோர் எண்ணிக்கை யாது?
1) 16 2) 7 3) 5

16) நாயையும் பூனையையும் மட்டும் வளர்க்க விரும்புவோர் எண்ணிக்கை யாது?
1) 1 2) 2 3) 4

17) ஒரு சொல்லில் நிதமும் இருப்பவை
1) குறிலும் நெடிலும் 2) எழுத்தும் கருத்தும் 3)மெய்யும் உயிரும்

18) **வண்ணம் பல கொண்டது**
**கண்களைத் தான் பறிக்குது**
**வாசனையை வீசியே**
**வண்டினைத் தான் அழைக்குது**

இப்பாடல் வர்ணிப்பது யாது?
1) உணவு 2) பூக்கள் 3)மருந்து

19) **''சூரியனின் வருகையினால்**
**மலர்களெல்லாம் மலர்ந்தனவே**
**பாலர் நாமும் கண்விழிப்போம்**
**கால்முகம் கை கழுவிடுவோம்''**

இப்பாடலில் கூறப்படும் பொழுது யாது?
1) காலை 2)நண்பகல் 3) மாலை

**வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

20) அம்மா: உணவு எனின் ஆசிரியர் : ............................
1) அன்பு 2)அறிவு 3)வெற்றி

21) மழை:வெள்ளம் எனில் வெளிச்சம்: ..........................
1) நிழல் 2) ஒளி 3) சூரியன்

**பின்வரும் கோவையைப் பார்க்க**

3 ✡ 3 = 12 # 3

**இங்கு = குறியீடானது சமனைக் குறிக்கின்றது.**


**நியம கணிதச் செய்கைகளுக்காக ✡ , # என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.**

இதற்கேற்ப

22) # என்ற குறியீடானது எதற்காப் பயன்படுத்தப்பட்டுள்ளது?
1) வகுத்தல் 2) கூட்டல் 3) கழித்தல்

23) ✡ என்ற குறியீடானது எதற்காப் பயன்படுத்தப்பட்டுள்ளது?
1) கூட்டல் 2) பெருக்கல் 3) கழித்தல்

24) இரு சோடி சமச்சீர்க் கோடுகளை மாத்திரம் கொண்ட உருவைத் தெரிவு செய்க.



25) மாலா 5mவடக்கு நோக்கிச் சென்று அங்கிருந்து கிழ்கடு நோக்கி 10m சென்று மீண்டும் வலப் பக்கம் திரும்பி 5mசெல்கின்றாள். ஆரம்பித்த இடத்திற்கும் தற்போது நிற்கும் இடத்திற்கும் இடையிலான தூரம் யாது?
1) 20m 2) 5m 3) 10m

26) பிழையான கோவையைத் தெரிவு செய்க
1) 6x6+6=46 2) 7x7+7=56 3) 8x8+8=72

27) சரியான கோவையைத் தெரிவு செய்க
1) 36-8+5=34 2) 53-9+13 =58 3) 53-7+9=55




28) மாம்பழம் ஒன்றின் விலை யாது?
1) ரூபாய் 8.00 2) ரூபாய் 9.00 3)ரூபாய் 10.00

29) மாம்பழம் ஒன்றும் அன்னாசிப் பழம் ஒன்றும் வாங்கிக் கொண்டு ரூபாய் 100தாளைக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப் பணம் யாது?
1) ரூபாய் 80.00 2) ரூபாய் 79.00 3) ரூபாய் 68.00

விடுபட்ட பகுதியைப் பூரணப்படுத்தப் பொருத்தமான பகுதி யாது?

30)

1) 2) 3)

31)

1) 2) 3)

32) U, W, X, S, Y, T, Z அருகிலுள்ள ஆங்கில எழுத்துக்களை ஆங்கில அரிச்சுவடி ஒழுங்கில் எழுதும் போது நடுவில் வரும் எழுத்து
1) X 2) W 3) U

33) "தான் பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி பிறந்தேன்" என பார்த்தீபன் கூறினான். அதன் படி அவன் பிறந்த வருடமாக இருக்கக் கூடியது.
1) 1999 2) 2005 3) 2016

34) 200இன் அரைவாசியின் 1/4உடன் 8ஐக் கூட்டும் போது கிடைக்கும் எண் யாது?
1) 35 2) 33 3) 32

**பின்வரும் உவமைத் தொடர்களுக்குப் பொருத்தமான சம்பவங்களைத் தெரிவு செய்க.**

35) சூரியனைக் கண்ட பனி போல....
1. வறுமையால் வாடிய கண்ணனின் குடும்பத்தில் அவனது சகோதரி படித்து உழைக்கத் தொடங்கியமை
2. வலக்காலில் முறிவு ஏற்பட்ட கண்ணனுக்கு இடக்கையில் கம்பி குத்தியமை
3. தொழில் செய்துகொண்டிருந்த கண்ணனை தொழிலில் இருந்து நீக்கியமை

36) கீரியும் பாம்பும் போல....
1. தந்தையைக் கண்டதும் மகன் ஓடி ஒளித்தல்
2. கண்ணனும் அவனது நண்பனும் ஒன்றாகக் கூடி கருமமாற்றுதல்.
3. பாலனும் அயல் வீட்டாரும் தினமும் சண்டை பிடித்தல்.

37) தரப்பட்ட உருவில்?குறியினால் காட்டப்படும் நிரலில் இருக்க வேண்டிய குறியீட்டுத் தொகுதி எது?


| | | |
|---|---|---|
| ◎ | □ | ? |
| ∗ | ◎ | ? |
| □ | ∗ | ? |

1) ∗ ◎ □ 2) ◎ □ □ 3) ∗ □ ◎

38) □ + ○ = 53
△ + △ = 36
△ + ○ = 45
எனின் □ இன் பெறுமதி யாது?
1) 18 2) 27 3) 26

39) என்னிடம் ரூபா 100,ரூபா50,ரூபா20 நாணயத்தாள்களில் மாத்திரம் ரூபா 250 உண்டு. என்னிடம் உள்ள ரூபா 20 தாள்களின் எண்ணிக்கை யாது?
1) 4 2) 5 3) 10

40)முழு உருவத்தினதும் பரப்பளவு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவின்
1.இரு மடங்காகும்
2.மூன்று மடங்காகும்
3.நான்கு மடங்காகும்



புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவச் செல்வங்களே வாராந்தம் சனிக்கிழமைகளில் தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்கள் வெளியாகும். அவற்றுக்கான விடைகளை எழுதி கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வெற்றியாளர் பெயர் புள்ளிகளுடன் பிரசுரிக்கப்படும்.

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# பெருந்துயர் துடைக்கும் கொடையாளர்கள்




சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினால் 'மக்களிடமிருந்து மக்களுக்கு' என்ற தொனிப்பொருளில் வீமன்காமம், கீரிமலை, செந்தெழு மாதிரிக் கிராமம், தெல்லிப்பழை மற்றும் மந்துவில் வடக்கு ஆகிய பிரதேசங்களில் வாழும் 300 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)




கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தம்பகாமம் கிராமத்தில், பீட் கல்வி பொருளாதார அபி விருத்தி அமைப்பின் அனுசரணையுடன் 50 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)




சுவிற்சர்லாந்து பேர்ண் கல்யாண சுப்பிரமணியர் ஆலய குருமார்கள், பரிபாலனசபையினர், ஆலய தொண்டர்கள், அடியார்கள் அனைவரினதும் நிதிப்பங்களிப்பில் முல்லைத்தீவு கரைதுரைப்பற்று கருநாட்டுக்கேணி கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட 54 குடும்பங்களுக்கும், குமுழமுனை ஐந்தாம் வட்டாரம் கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் 26 குடும்பங்களுக்கும் அண்மையில் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம)




முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்ட 45 முதியோர்களுக்கு வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)




வித்தியானந்தா கல்லூரியின் பழைய மாணவர்சங்க சுவீஸ் கிளை அமைப்பின் நிதியில், முல்லைத்தீவு, உடுப்புக்குளம்பகுதியில்வாழும்சிலகுடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)



கணுக்கேணி மேற்கில் வசிக்கும் வயோதிபப் பெண்ணொருவருக்கு லண்டனில் வாழும் புலம்பெயர் நபரான கந்தபிள்ளை பிரதாபன் என்பவரின் நிதி உதவியில் படுக்கை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. (ம)




வரோட் அமையமானது நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் அசாதாரண சூழ்நிலை காரணமாகவும், காலத்தின் தேவையை அறிந்தும் மிகவும் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழும் குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக கோழி வளர்ப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. வவுனியா வெங்கள செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மணியர் குளம், தட்டான் குளம், துட்டுவாகை, மெனிக் பாம், கணேசபுரம், நாணாட்டி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் 21 குடும்பங்களுக்கு இந்த உதவி வழங்கப்பட்டது. (ம)

# விராட் கோலிக்கு எவரும் நிகரில்லை

## இயன் சப்பல் புகழாரம்



புதுடெல்லி, மே 21
தற்போதைய தலைமுறையில் 3 வடிவங்களிலும் ஆகச்சிறந்த வீரரும் தலைவரும் விராட் கோலிதான் என்று ஆஸ்திரேலி அணியின் முன்னாள் தலைவரும் கிரிக்கெட் பண்டிதருமான இயன் சப்பல் தூக்கி நிறுத்தியுள்ளர்.
கோலி, சிமித், ஜோ ரூட், கேன் வில்லியம்சன் ஆகிய நால்வரில் கோலியே கேள்வியின்றி இப்போதைக்கு சிறந்தவர் என்கிறார் இயன் சப்பல்.
இது தொடர்பில் இயன் சப்பல் மேலும் தெரிவித்ததாவது:
அந்தக்குழுவில் 3 வடிவங்களிலும் கோலிதான் சிறந்த வீரர். இதில் கேள்விக்கே இடமில்லை. 3 வடிவங்களிலும் அவரது சாதனையை நம்பமுடியாமல் இருக்கிறது. கோலி விவ் ரிச்சட்ஸைப் போன்றவர். கோலியைத் தனித்துவமாக்குவது அவரது உடற்தகுதி. அது தான் அவரை சிறப்பாகச் செயற்பட வைக்கிறது. ஓட்டங்களைப் பெறுவதற்காக அவர் ஓடும் வேகம் தனித்துவமானது. அவரது சில ஆட்டங்கள் உண்மையில் பிரமாதம்.
தலைமைத்துவத்தைப் பொறுத்தவரையில் கோலியிடம் உள்ள இன்னொரு அம்சம் தோல்வியைக் கண்டு அஞ்ச மாட்டார். வெற்றிபெறும் முயற்சியில் தோல்விவந்தால் கூட அவர் கவலைப்பட மாட்டார்.
வெற்றியை எந்த தருணத்திலும் முன்னிறுத்துவார், அதுதான் கோலியிடம் எனக்குப் பிடித்தது. எந்த ஒரு தலைவரும் அந்த வழியை கடைப்பிடிக்க வேண்டும். தலைமைத்துவத்தை அவர் எடுத்துக் கொண்ட புதில் இவர் உணர்ச்சிவயப்படுபவர் என்று கருதினேன். அது அவர் தலைமைத்துவத்தைப் பாதித்துவிடும் என்றே கருதினேன். மிகவும் புத்திசாலியான கிரிக்கெட் வீரர் கோலி - என்றார். (ம)



# கவாயாவுக்கு கதவுகள் மூடப்பட்டன!

சிட்னி, மே 21
உஸ்மன் கவாயா ஆஸ்திரேலிய அணிக்குள் நுழைவதற்கு வாய்ப்புக்கள் மிகமிகக் குறைவு என்று தெரிவித்துள்ளார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் பொண்டிங்.
உஸ்மான் கவாஜாவுக்காக வருந்தும் தொனியில் பேசிய ரிக்கி பொண்டிங் மேலும் தெரிவித்ததாவது:
நான் நேர்மையாக என்ன நினைக்கிறேன் என்றால் இனி அவர் ஆஸ்திரேலிய அணிக்குள் நுழைய முடியாது என்றே. நான் அவருக்காக வருந்துகிறேன். அவர் நல்ல வீரர் என்றே நான் எப்போதும் கருதி வந்துள்ளேன். ஆனால் அவரது மிகச்சிறந்த ஆட்டத்தை நாங்கள் சர்வதேச அரங்கில் பார்த்ததில்லை. அதன் சில தெறிப்புகளை மட்டுமே பார்த்திருக்கிறேன்.
சீரான முறையில் அவர் நன்றாக ஆடியதில்லை என்றே உணர்கிறோம். ஆஸ்திரேலியாவுக்காக எப்படி நன்றாக விளையாட வேண்டுமோ அப்படி அவர் சீராக விளையாடவில்லை என்று உணர்கிறோம். ஆனால் சிறந்த வீரர்களை நாம் அப்படி ஒதுக்கிவிட முடியாது. குவீன்ஸ்லாந்து அணிக்கு அவர் ஓட்டங்களைக் குவித்தால் மீண்டும் சர்வதேச கிரிக்கெட்டுக்கு வரமுடியும். மீண்டும் வாய்ப்பு கிடைத்தால் அவர் எங்களைக் கைவிடமாட்டார் என்றே நிச்சயமாகக் கருதுகிறேன் - என்றார். (ம)

# தடையில் இருந்து தப்பினார் கெய்ல்!




ட்ரினிடாட், மே 21
ஜமைக்கா அணியில் இருந்து நீக்கப்பட்டதால் சர்வான் மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை அள்ளி வீசிய கெய்ல் தனது பேச்சுக்கு வருத்தம் தெரிவித்ததால் ஒழுக்காற்கு நடவடிக்கையில் இருந்து தப்பினார்.
கெய்ல் கரீபியன் பிறீமியர் லீக்கில் ஜமைக்கா தல்லாவாஸ் அணிக்காக விளையாடி வந்தார். இந்த சீசனுக்கான ஜமைக்கா அணியில் அவரை அந்த அணி நிர்வாகம் தக்கவைக்க விரும்பாமல் கழற்றி விட்டது. இதையடுத்து அவரை செயின்ட் லூசியா அணி தேர்வு செய்தது. ஜமைக்கா அணியில் இருந்து தான் நீக்கப்பட்டதற்கு அந்த அணியின் பயிற்சியாளரும், முன்னாள் வீரருமான ராம்நரேஷ் சர்வான்தான் முக்கிய காரணம் என்று கெய்ல் பகிரங்கமாக குற்றம்சாட்டி வீடியோ பதிவு ஒன்றை வெளியிட்டார். அதில், 'சர்வான் கொரோனாவைவிட கொடியவர், விஷப் பாம்பு, முதிர்ச்சி அற்றவர், நம்பிக்கைத் துரோகி'' என்று சகட்டுமேனிக்குகெய்ல்திட்டித்தீர்த்தார்.
ஆனால் கெய்லை நீக்கியது அணி உரிமையாளர்களின் முடிவே தவிர இதில் எனது பங்கு துளியும் கிடையாது என்று சர்வான் திட்டவட்டமாக மறுத்தார். இதற்கிடையே குறிப்பிட்ட அணியுடன் ஒப்பந்தத்தில் உள்ள வீரர் விதிமுறையை பின்பற்ற வேண்டும். மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட்டுக்கும், சி.பி.எல் கிரிக்கெட்டுக்கும் களங்கத்தை ஏற்படுத்திய கெய்ல் தண்டனையை எதிர்கொள்ள வேண்டி இருக்கும் என்று வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் வாரிய தலைவர் ரிக்கி ஸ்கெரிட் கூறியிருந்தார்.
இந்த நிலையில் கெய்ல் தனது பேச்சுக்கு வருத்தம் தெரிவித்துள்ளார். அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில், ''ஜமைக்கா அணியில் இருந்து நான் நீக்கப்பட்டதன் உண்மை நிலவரத்தை ரசிகர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக மட்டுமே அந்த வீடியோவை வெளியிட்டேன். ஜமைக்கா அணியில் இருந்து நான் 2ஆவது முறையாக விலக்கப்பட்டுள்ளேன். என்னுடைய சி.பி.எல். கிரிக்கெட் வாழ்க்கையை ஜமைக்கா அணிக்காக, சபீனா பார்க் மைதானத்தில் என்னுடைய சொந்த ஊர் ரசிகர்களின் முன்னிலையில் முடித்துக் கொள்ள விரும்பினேன். ஏற்கனவே இரண்டுமுறை எனது தலைமையில் ஜமைக்கா அணி கிண்ணம் வென்றுள்ளது.
அவர்கள் என்னை நடத்திய விதத்தால் ஏற்பட்ட மனக்கசப்பு இன்னும் உள்ளது. அந்த வீடியோவில் நான் பேசிய வார்த்தைகளில் உறுதியாக இருக்கிறேன். அவை எனது இதயத்தில் இருந்து வெளிப்பட்டவை. அதே நேரத்தில் எனது பேச்சின் சில பகுதிகள் வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட்டுக்கும், சி.பி.எல் கிரிக்கெட்டுக்கும் அவப்பெயரை ஏற்படுத்தியதை ஒப்புக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். கெய்ல் தன்னுடைய பேச்சுக்கு வருத்தம் தெரிவித்ததால் திருப்தி அடைந்த சி.பி.எல் நிர்வாகம் இத்துடன் இந்த சர்ச்சையை முடித்து வைத்தது. இதனால் தண்டம் அல்லது தடை போன்ற நடவடிக்கைகளில் இருந்து கெய்ல் தப்பினார். (ம)

# டோனிக்கு மாற்றுவீரர் நானில்லை வெற்றிடத்தையே நிரப்ப வந்தேன்

## சகா வெளிப்படைப் பேச்சு

புதுடெல்லி, மே 21
டோனிக்கு மாற்றுவீரர் நானில்லை. அவர் அணியில் இருந்து விலகிச் சென்றதால் தான் வாய்ப்புக் கிடைத்தது - என்று தெரிவித்தார் இந்திய டெஸ்ட் அணியின் இலக்குக் காப்பாளர் சகா.
இது தொடர்பில் சகா மேலும் தெரிவித்ததாவது:
நான் டோனியின் இடத்தை நிரப்பவில்லை. டோனி ஓய்வுபெற்ற பிறகு எனக்கு டெஸ்ட் போட்டியில் விளையாட வாய்ப்பு கிடைத்திருக்கிறது. நான் டெஸ்ட் போட்டியில் அறிமுகமான தினத்தன்று லக்ஷமண் காயம் காரணமாக விளையாடவில்லை. அவருக்குப் பதிலாக ரோகித் சர்மாவை அணியில் சேர்த்தனர்.
அப்போது பயிற்சியில் நானும் ரோகித் சர்மாவும் எதிர்பாராத விதமாக ஒருவர் மீது மற்றொருவர் மோதிக் கொண்டோம். அதில் இருவரும் காயமடைந்தோம். ரோகித் விளையாடமுடியாத அளவிற்குக் காயமடைந்தார். பின்னர் போட்டி தொடங்கும் நேரம் வந்ததால் தென்னாப்பிரிக்க அணித்தலைவருடன் டோனி நாணயச் சுழற்சி செய்துவிட்டு வந்தார். வரும்போது என்னைப் பார்த்து நீ இன்று விளையாடுகிறாய் சகா என்றார். என்னால்நம்பமுடிய வில்லை. டோனிதான் எனக்கு வாய்ப்பு கொடுத்தார். பின்னர் டெஸ்ட் போட்டிகளிலிருந்து டோனி ஓய்வு பெற்றுவிட, அந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. டோனியிடம் கற்றுக்கொள்ள ஏராளமானவை இருக்கின்றன''- என்றார். (ம)






இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.05.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.